06.10.2015

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### சுற்றுலா பயணிகளை கவரும் ராமநாதபுரம் ஐந்திணை பூங்கா



ராமநாதபுரம்:ராமநாதபுரம் அருகே தோட்டக்கலைத்துறை சார்பில், அமைக்கப்பட்ட ஐந்திணை மரபணு பூங்கா சுற்றுலா பயணிகளை வெகுவாக கவர்ந்துள்ளது. அங்கு சினிமா 'சூட்டிங்' எடுக்கவும் அனுமதித்துள்ளனர்.தமிழகத்தில் தோட்டக்கலைத்துறை சார்பில், நிலங்களின் சிறப்புக்கு ஏற்ப ஐந்திணை பூங்கா அமைக்க திட்டமிடப்பட்டது. குறிச்சி பூங்கா சேலம் ஏற்காட்டிலும், முல்லை பூங்கா திண்டுக்கல் சிறுமலையிலும், நெய்தல் பூங்கா நாகப்பட்டினம் திருக்கடையூரிலும், மருதம் பூங்கா தஞ்சையிலும், பாலை பூங்கா ராமநாதபுரம் அச்சடிபிரம்பிலும் அமைக்கப்பட்டது.

இதில் உவர்ப்பு மண் காரணமாக அச்சடிபிரம்பில் பாலை பூங்கா அமைப்பதில் சிக்கல் ஏற்பட்டது. இதனால் அந்த பூங்காவை தவிர மற்றவை 5 ஆண்டுகளுக்கு முன் திறக்கப்பட்டன. அதன்பின் அச்சடிபிரம்பில் மண்ணின் தன்மையை மாற்றி, செடிகள் வளர்க்கப்பட்டு ஐந்திணை பூங்காவாக அமைக்கப்பட்டது. இந்த பூங்கா ஜூன் 16ல் திறக்கப்பட்டது. இப்பூங்கா ரூ.7.40 கோடி செலவில் 10 ஏக்கரில் அமைந்துள்ளது. இங்கு பாலைக்கே உரிய பனை மரக்குடில்கள் ஏராளமாக உள்ளன.

ஊதா கலரில் பூக்கும் காட்டுரோஜா, பைஜஸ்பெஞ்சமினா, கிளியோடென்ட்ரான், கூந்தல் பனை, கற்றாழை, மணல் மேடுகள், யானை போன்ற காட்டு விலங்குகளின் சிலைகள் உள்ளன. இந்த பூங்கா கிழக்கு கடற்கரை சாலையில் அமைந்துள்ளதால் திருச்செந்தூர், ராமேஸ்வரம் செல்லும் சுற்றுலா பயணிகளை வெகுவாக கவர்ந்துள்ளது. இதனால் தினமும் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் வந்து செல்கின்றனர். தோட்டக்கலை அலுவலர் அழகேஸ்வரன் கூறியதாவது: பூங்கா தினமும் காலை 8:30 முதல் இரவு 8:30 மணி வரை திறந்திருக்கும். பூங்காவின் நீர் தேவைக்காக தற்போது ரூ.10 லட்சத்தில் 2 குளங்கள் வெட்டியுள்ளோம். வெளிநாட்டுப் பூக்களை வளர்க்கவும் நடவடிக்கை எடுத்துள்ளோம். சினிமா 'சூட்டிங்' எடுக்கவும் அனுமதித்துள்ளோம், என்றார்.

## ஒரே தாரில் 365 வாழைக்காய் ஐந்தடி உயரம்



திண்டுக்கல்:திண்டுக்கல் மார்க்கெட்டில் 365 காய்களுடன், ஐந்தடி அடி உயர வாழைத்தாரை விவசாயி அரவிந்தன் விற்பனைக்கு கொண்டு வந்தார்.திண்டுக்கல் வாழைக்காய் மார்க்கெட்டிற்கு கோட்டூர் ஆவாரம்பட்டி விவசாயி அரவிந்தன், ஐந்தடி உயர வாழைத்தாரை விற்பனைக்கு கொண்டு வந்தார். வியாபாரிகள், பொதுமக்கள் பார்த்து வியந்தனர்.

விவசாயி அரவிந்தன் கூறியதாவது: இருபதுஆண்டுகளாக வாழை விவசாயம் செய்கிறேன். மாடு, ஆடுகளின் சாணம், மண் புழு மூலம் தயாரிக்கப்பட்ட இயற்கை உரம் மட்டுமே பயன்படுத்துகிறேன். இதுபோன்ற வாழைத்தார் உருவானது இதுதான் முதல்முறை. இதில் 365 காய்கள் உள்ளன, என்றார். வியாபாரி சரவணன் கூறுகையில், “முப்பதாண்டு வியாபாரத்தில் திண்டுக்கல் மாவட்டத்தில் இப்போதுதான் 5 அடி உயர வாழைத் தாரை, பார்க்கிறேன், என்றார்.

## பெரியாறு அணைநீர்மட்டம் உயர்வு

கூடலூர்: பெரியாறு அணை நீர்பிடிப்பு பகுதியில்,, பெய்து வரும் கனமழையால் அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.கடந்த சில

தினங்களாக பெரியாறு அணை, தேக்கடி பகுதியில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால், அணைக்கு நீர்வரத்து அதிகரித்து நேற்று காலை நிலவரப்படி 722 கன அடி நீர் இருந்தது. அணையின் நீர்மட்டம் 116.50 அடியாக உயர்ந்துள்ளது. தமிழகப்பகுதிக்கு 511 கன அடி நீர் திறந்து விடப்பட்டுள்ளது. நீர் இருப்பு 1997 மில்லியன் கன அடி. தொடர்ந்து நீர்பிடிப்பு பகுதியில் மழை பெய்து வருவதால், அணையின் நீர்மட்டம் மேலும் உயர வாய்ப்புள்ளது.மழையளவு (மி.மீ.,): பெரியாறு 19.6, தேக்கடி 8.2, கூடலூார் 8, வைகை அணை 6.8, சோத்துப்பாறை 14, கொடைக்கானல் 4.

## பெரியாறு பாசனத்திற்கு வைகை நீர்: விவசாயிகள் புகார்

ராமநாதபுரம்,:வைகை பாசனத்திற்குரிய நீரை பெரியாறு பாசனத்திற்கு திறந்துவிடுவதாக ராமநாதபுரம், சிவகங்கை மாவட்ட விவசாயிகள் புகார் தெரிவித்தனர்.நீர்ப்பிடிப்பு பகுதியை பொறுத்து, வைகை அணையில் பெரியாறு பாசன நீர், வைகை பாசன நீர் என, தனித்தனியாக பிரித்து கணக்கிடப்படப்படுகின்றன. தேங்கும் அளவிற்கு தகுந்தாற்போல், அதற்குரிய பாசன பகுதிகளுக்கு தண்ணீர் திறந்து விடப்படுகிறது.வைகை பாசன நீர் மதுரை மாவட்டத்தின் சில பகுதி, சிவகங்கை, ராமநாதபுரம் மாவட்டங்களுக்கு திறந்து விடப்படுகிறது. இந்த பாசனநீர் மூலம் 1.30 லட்சம் ஏக்கர் பயன்பெறுகின்றன. மேலும் மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம் மாவட்ட பகுதிகளுக்கும் குடிநீர் ஆதாரமாகவும் உள்ளது. தற்போது வைகை அணையில் வைகை பாசன நீர் 1,824 மில்லியன் கன அடியாகவும், பெரியாறு பாசன நீர் 195 மில்லியன் கன அடியாகவும் உள்ளது.தற்போது பெரியாறு பாசன பகுதிகளுக்கு தண்ணீர் திறந்துவிடப்பட்டது. இதில் வைகை பாசனத்திற்குரிய நீரை திறந்துவிட்டதாக சிவகங்கை, ராமநாதபுரம் மாவட்ட விவசாயிகள் புகார்

தெரிவித்தனர்.

வைகை பாசன திட்டக்குழு உறுப்பினர் பாலசுந்தரமூர்த்தி கூறியதாவது: வைகை அணையில் இருந்து 1974 வரை செப்டம்பரில் மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம் மாவட்டங்களுக்கு தண்ணீர் திறந்துவிடப்பட்டன. இதன்மூலம் இரு போகம் வரை விவசாயம் செய்தோம். அதன்பின் வைகை பாசன நீரையும் பெரியாறு பாசன பகுதிகளுக்கே அதிகாரிகள் திறந்துவிட்டு வருகின்றனர். இதனால் வைகை ஆற்று பகுதியில் நிலத்தடி நீர் மட்டம் குறைந்துவிட்டது. பல முறை போராடியும் நடவடிக்கை இல்லை. தற்போது 195 மில்லியன் கன அடி மட்டுமே பெரியாறு பாசன தண்ணீர் உள்ளது. ஆனால் 900 மில்லியன் கன அடி பெரியாறு பாசனத்திற்கு திறந்துவிட்டுள்ளனர். இதுகுறித்து தமிழக முதல்வருக்கு மனு அனுப்பியுள்ளோம், என்றார்.

வைகை அணை பொதுப்பணித்துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது: வைகை நீரை, பெரியாறு பாசனத்திற்கும், பெரியாறு நீரை வைகை பாசனத்திற்கும் பயன்படுத்துவது வழக்கம் தான். தண்ணீர் தேவை ஏற்படும் போது ராமநாதபுரம், சிவகங்கை மாவட்டத்திற்கு திறந்துவிடுவோம், என்றார்.

## கடற்பாசிகள் தேவை அதிகரிப்பு: 4 மாவட்டங்களில் 900 டன் சேகரிப்பு



ராமநாதபுரம்:மருத்துவ குணமுடைய கடற்பாசியின் தேவை அதிகரித்துள்ளதால் ராமநாதபுரம், புதுக்கோட்டை உள்ளிட்ட 4

மாவட்டங்களில் ஆண்டிற்கு 900 டன் வரை சேகரிக்கப்படுகறது. கடற்பாசியில் இருந்து மருந்துகள், ஆடைசாயம், சாக்லேட், ஐஸ்கிரீம், பற்பசை, விண்வெளி வீரர்களுக்கான உணவு உள்ளிட்ட 200 க்கும் மேற்பட்ட பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. பாக்ஜலசந்தி, மன்னார் வளைகுடா பகுதிகளில் கஞ்சிப்பாசி, பக்கடாபாசி, கட்டக்கோரை, மரிக்கொழுந்து ஆகிய 4 வகைகளாக கடற்பாசிகள் கிடைக்கின்றன. இவை கடலில் 20 அடி ஆழத்தில் கிடைக்கும். இவற்றை சேகரிக்கும் பணியில் ராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சை உள்ளிட்ட மாவட்ட கடலோர கிராமங்களை சேர்ந்த 5 ஆயிரம் மீனவ குடும்பங்கள் ஈடுபட்டுள்ளன. பெரும்பாலும் பெண்களே இந்த தொழிலை செய்கின்றனர். தற்போது தேவை அதிகரித்துள்ளதால் கடற்பாசி சேகரிப்பில் மீனவர்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர். ராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சை உள்ளிட்ட 4 மாவட்டங்களில் மட்டும் ஆண்டிற்கு 900 டன் கடற்பாசி சேகரிக்கப்படுகின்றன.இவற்றை தனியார் நிறுவனங்கள் தரத்திற்கு ஏற்ப கிலோ ரூ.15 முதல் ரூ.25 வரை விலை நிர்ணயம் செய்து கொள்முதல் செய்கின்றன. இதன்மூலம் ஒவ்வொரு மீனவ குடும்பத்திற்கும் மாதம் ரூ.12 ஆயிரம் வரை கிடைக்கிறது.திருப்புல்லாணி தனியார் நிறுவன பொறுப்பாளர் ஒருவர் கூறியதாவது: மீனவர்களிடம் கடற்பாசியை கொள்முதல் செய்து அவற்றை அரைத்து ராணிப்பேட்டையில் உள்ள எங்கள் நிறுவனத்திற்கு அனுப்புகிறோம். பின் அவற்றை பயன்பாட்டு பொருளாக மாற்றி வெளிநாடு, வெளிமாநிலங்களுக்கு அனுப்பப்படும். நாங்கள் தினமும் 6 முதல் 10 டன் வரை கொள்முதல் செய்கிறோம். மழைநேரங்களில் பாசியை சேகரிக்க முடியாது, என்றார்.

## வேட்டங்குடிக்கு பறவைகள் வருகை

சிவகங்கை:வேட்டங்குடி பறவைகள் சரணாலயத்தில் வெளிநாட்டு பறவைகள் இனப்பெருக்கம் துவங்கியுள்ளன என, மாவட்ட வன

அலுவலர் குருசாமி தெரிவித்தார். சிவகங்கை,திருப்புத்துார் அருகே வேட்டங்குடிபட்டி, சின்ன,பெரிய கொள்ளுகுடிபட்டி கண்மாய் என 38.4 எக்டேரில் சரணாலயம் அமைந்துள்ளது. கடந்த ஆண்டு போதிய மழை இன்றி வெளிநாட்டு பறவைகள் வரத்து இல்லை. தற்போது மழை பெய்து வருவதால், மூன்று கண்மாய்களிலும் நீர் வரத்துள்ளது. கடந்த 10 ஆண்டுக்கு முன், இச்சரணாலயத்திற்கு 10 முதல் 15 ஆயிரம் பறவைகள் வரத்து இருந்தன.தற்போது மியான்மர்,தாய்லாந்து, இந்தோனேசியா, மலேசியா, நேபாளம் போன்ற நாடுகள் மற்றும் அந்தமான் நிகோபார் தீவுகளில் இருந்து, சாம்பல் நிற நாரை,பாம்புதாரா,பெரிய நீர்காகம்,கூழைகடா, முக்குளிப்பான்,செந்நாரை,வெள்ளை அரிவாள் மூக்கன் எ, 5ஆயிரத்திற்கும் மேற்பட்ட பறவைகள் வந்துள்ளன. பறவை ஆர்வலர்கள் இவற்றை பார்வையிட ஏதுவாக, வனத்துறை மூலம் கண்காணிப்பு கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது.சிவகங்கை மாவட்ட வனத்துறை அலுவலர் குருசாமி கூறுகையில்,“வேட்டங்குடி சரணாலயத்திற்கு 5 ஆயிரம் பறவைகள் வந்துள்ளன. கண்மாய் மரங்களில் கூடு கட்டி, இனப்பெருக்கத்தை துவக்கியுள்ளன. எந்நேரமும் பறவைகளை பார்த்து ரசிக்கலாம். இன்னும் அதிக பறவைகள் வரும் என்றார்.

**அரியவகை 'சிங்கி இறால்' சிக்கின : மண்டபம் மீனவர்கள் மகிழ்ச்சி**



ராமேஸ்வரம்: ராமேஸ்வரம் அருகே பாம்பன் மீனவர்கள் வலையில் சிக்கும் விலை உயர்ந்த சிங்கி இறால் மீன்கள், ஜப்பான், சிங்கப்பூருக்கு ஏற்றுமதியாவதால் மீனவர்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.பாம்பனில் இருந்து அக். 4 தேதி, 100க்கு மேலான நாட்டுபடகில் மீன்பிடிக்க சென்ற மீனவர்கள் நேற்று கரை திரும்பினர். 30 படகுகளில் ஒன்று முதல் இரு கிலோ வரை எடையுள்ள 100க்கு மேலான 'சிங்கி இறால்' மீன்கள் சிக்கியது. இவை உயிருடன் இருந்தால் தான் அதிக விலைக்கு வியாபாரிகள் வாங்குவார்கள். ஆகையால் சிங்கி மீனை மிக பாதுகாப்புடன் மீனவர்கள் கரைக்கு கொண்டு வந்தனர்.ஒரு கிலோவுக்கு மேல் எடை கொண்ட சிங்கி இறால் ரூ.3500, 500 கிராமுக்குமேல் ரூ.2500, 200 கிராமுக்கு மேல் ரூ.1900, 100 கிராமுக்கு மேல் ரூ.1000 என விலை நிர்ணயித்து வியாபாரிகள் வாங்கினர். இவற்றை சுத்தமான கடல் நீரில் ஆக்ஸிஜன் உள்ள தொட்டிக்குள் விட்டு உயிருடன் வைத்திருப்பார்கள். பின் துாத்துக்குடி, கன்னியாகுமரி ஏற்றுமதி கம்பெனிகளுக்கு அனுப்பி, அங்கிருந்து உயிருடன் 'பேக்' செய்து விமானம் மூலம் ஜப்பான், சிங்கப்பூர், சீனா, தாய்லாந்துக்கு செல்கிறது. அழிவின் விளிம்பில் உள்ள சிங்கி இறால் வரத்து குறைந்தாலும், வெளிநாடுகளில் கிராக்கி உள்ளதால் விலையும் குறையாது. இதனால்

மீனவர்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.இதுகுறித்து பாம்பன் வியாபாரி ரூஸ்வேர்ல்ட் கூறியதாவது:வெளிநாடு ஓட்டல்களி சிங்கி இறால் உயிருடன் தொட்டியில் ஓடினால் தான், மீன் பிரியர்கள் வாங்கி சாப்பிடுவார்கள். விலை அதிகம் என்பதால் உயிர் சிங்கி இந்தியாவில் விற்பனை இல்லை. இறந்த சிங்கி மட்டும் விற்கப்படுகிறது. நவ., முதல் ஜன., வரை குளிர் சீசனில் சிங்கி இறால் அதிகம் சிக்கும். ஆனால் தங்கு ஊசி வலை, முடி வலை உள்ளிட்ட வரம்பு மீறி மீன்பிடியால் சிங்கி இறால் குஞ்சுகள் இறந்து விடுகின்றன. இவற்றை பாதுகாக்க மீனவர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

## விலங்குகளை பார்வையிட கோபுரம்: வனத்துறை ஏற்பாடு

விருதுநகர்:ஸ்ரீவில்லிபுத்துார் சாம்பல் நிற அணில்கள் சரணாலய பகுதியில், சூழல் சுற்றுலா திட்டத்தில் விலங்குகளை பார்வையிட, வனத்துறை சார்பில் கோவிலாறு அணை பகுதியில் கண்காணிப்பு கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது.ஸ்ரீவில்லிபுத்துார் சாம்பல் நிற அணில்கள் சரணாலய பகுதிகளான மதுரை மாவட்டம் சாப்டூர், விருதுநகர் மாவட்டம் வத்திராயிருப்பு, ஸ்ரீவில்லிபுத்துார், ராஜபாளையம் பகுதிகளில் ஏராளமான யானை, மான், சிறுத்தைகள், அரிய வகை உயிரினமான சாம்பல் நிற அணில்கள் உட்பட ஏராளமான வனவிலங்குகள், மருத்துவ குணமுள்ள மூலிகை, அரிய வகை மரங்கள் உள்ளன. வனப்பகுதியில் அணைகட்டுகளும்,நீர் வீழ்ச்சிகளும் உள்ளன.தமிழ்நாடு உயிர்பன்மை பாதுகாப்பு திட்டத்தின் கீ, சாம்பல் நிற அணில்கள் சரணாலய பகுதியில் சூழல் சுற்றுலா பகுதியாக ராஜபாளையம் சாஸ்தா கோயில் அணைப்பகுதி, வத்திராயிருப்பு கோவிலாறு அணைப்பகுதிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. கோவிலாறு அணை பகுதிகளில் தலா 6 லட்சம் ரூபாய் செலவில், விலங்குகளை பார்வையிட கண்காணிப்பு கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது. கோவிலாறு

அணை பகுதியில் வனப்பகுதியில் 2 அரை கிலோ மீட்டர் நடந்து செல்லவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தாணிப்பாறை வனப்பகுதியில் சதுர கிரி கோயிலுக்கு பக்தர்கள் அனுமதிக்கப்படும் நாட்களில் மட்டும் சுற்றுலா பயணிகள் பார்வையிடவும் வனத்துறை அனுமதியளித்துள்ளது. வனத்துறை அதிகாரி ஒருவர் கூறுகையில்,“ சேத்துார் வனப்பகுதியில் சிறுத்தைகளும், கோவிலாறு அணை பகுதியில் யானைகளும் அதிகளவு உள்ளன. அப்பகுதிகளில் அரிய வகை மருத்துவ குணம் உள்ள மூலிகைகள், மரங்களை காண வசதியாக கண்காணிப்பு கோபுரங்கள் தற்போது அமைக்கப்பட்டுள்ளன. கோவிலாறு அணையை பார்வையிடும் பயணிகள் விரும்பினால், சதுரகிரி கோயில் பாதை திறக்கும் நாட்களில் தாணிப்பாறை வனப்பகுதியை பார்வையிடவும் அனுமதியளிக்கப்படும்,” என்றார்.

## மேட்டூர் அணையின் நீர்திறப்பு குறைப்பு

மேட்டூர் : மேட்டூர் அணையின் டெல்டா பாசனத்திற்காக திறக்கப்படும் நீரின் அளவு, 12,000 கனஅடியிலிருந்து 10,000கனஅடியாக குறைக்கப்பட்டது. கிழக்கு மற்றும் மேற்கு கால்வாய் பாசனத்திற்காக திறக்கப்படும் நீரும், 800 கனஅடியிலிருந்து 600 கனஅடியாக குறைக்கப்பட்டது. மேட்டூர் அணையின் நீர்மட்டம் 68.74 அடியாகவும், நீர் இருப்பு 31.62 டி.எம்.சி.,யாகவும் உள்ளது.

## வத்தல்மலையில் நிலச்சரிவு சுற்றுலா பயணிகளுக்கு தடை



தர்மபுரி :தர்மபுரி அருகே, வத்தல்மலையில், நேற்று நள்ளிரவு பெய்த கனமழையால் நிலச்சரிவு ஏற்பட்டு, பாறைகள் உருண்டு சாலையில் விழுந்தன. இதனால், சுற்றுலா பயணிகள், வத்தல்மலைக்கு செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.தர்மபுரி மாவட்டம், வத்தல்மலையில், சின்னாங்காடு, ஒன்றிகாடு, பால்சிலம்பு உள்ளிட்ட, ஏழு மலை கிராமங்கள் உள்ளன. இப்பகுதி மக்களின் தொடர் கோரிக்கையை அடுத்து, எழில்மிகு வத்தல்மலையை, சுற்றுலா தலமாக தமிழக அரசு அறிவித்தது. இரண்டு ஆண்டுகளுக்கு முன், 18 கோடி ரூபாய் செலவில், மலைப்பகுதிக்கு சாலை அமைக்கப்பட்டது. மாநிலத்தின் பல பகுதிகளில் இருந்து, இம்மலைக்கு சுற்றுலா பயணிகள் வருகின்றனர்.இந்நிலையில், வத்தல்மலை பகுதியில், நேற்று நள்ளிரவு பெய்த கனமழை காரணமாக, மலைப்பாதையில் திடீரென நிலச்சரிவு ஏற்பட்டது. இதில், மலைப்பகுதியில் இருந்த பாறைகள் சரிந்து, சாலையில் விழுந்தன.கிராம மக்கள், நேற்று காலை, பாறைகளை ஓரமாக தள்ளி, தற்காலிகமாக சாலையை சரிசெய்தனர். சிறிய ரக வாகனங்கள் மட்டும் மலைக்கு செல்கின்றன; பெரிய வாகனங்கள் செல்ல முடியாது என்பதால், சுற்றுலா பயணி களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.சேதமடைந்த சாலையை, முழுமையான அளவில் சீரமைக்க, அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என, கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## நேரடி விதைப்பில் விவசாயிகள் ஆர்வம்! தாமதத்தை தவிர்க்க புதிய ஏற்பாடு

கடலூர்: கடலூர் மாவட்டத்தில் சம்பா போக சாகுபடியில் உற்பத்தி செலவை குறைக்க விவசாயிகள் நேரடி நெல் விதைப்பில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

கடலூர் மாவட்டத்தில் 2.5 லட்சம் ஏக்கரில் சம்பா போக சாகுபடி செய்வதாக இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. டெல்டா பகுதிகளான சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் பகுதியில் சம்பா நடவு பணி நடந்து வருகின்றது. இந்த ஆண்டு கடும் வெயில், தண்ணீர் தட்டுப்பாடு ஆகியவற்றால் விவசாயிகள் நெல் நாற்று விடுவதில் தயக்கம் காட்டி வந்தனர்.

இதனால் ஏற்பட்ட தாமதத்தை ஈடு செய்வதற்காக தற்போது குமராட்சி, காட்டுமன்னார்கோவில், புதுச்சத்திரம், பரங்கிப்பேட்டை பகுதிகளில் 50 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் விவசாயிகள் நேரடி நெல் விதைப்பு செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். நெல் அறுவடை இயந்திரம் நடைமுறைக்கு வந்த பின்னர் தான், நெல் மகசூலில், விவசாயிகளுக்கு ஓரளவு லாபமான பயிராக உள்ளது. மேலும் இதன் உற்பத்தி செலவை குறைப்பதற்காக அரசு ஒற்றை நாற்று நடவு, இயந்திர நடவு செய்வதை ஊக்குவித்து வருகிறது. தற்போது கர்நாடகா, ஆந்திரா போன்ற அண்டை மாநிலங்களில் இருந்து தமிழகத்திற்கு அரிசி வரத்து அதிகரிப்பதால் நெல் விலை குறைவாகவே கொள்முதல் செய்யப்படுகிறது. நெல்லில் உற்பத்தி செலவை குறைக்க விவசாயிகள் பல்வேறு யுத்திகளை கையாண்டு வருகின்றனர். நாற்று விட்டு நடவு செய்வதை விட நேரடி நெல் விதைப்பு செய்வதால் நாற்று பிடுங்கும் கூலி, நடவு செலவு என ஏக்கர் ஒன்றுக்கு 3,000 ரூபாய் வரை மிச்சப்படுத்த முடியும். நேரடி நெல் விதைப்பு செய்வதால் களை சற்று கூடுதலாக வளரும். அதை கட்டுப்படுத்த பல தரமான களைக்கொல்லி மருந்துகள் மார்க்கெட்டில் வந்துவிட்டன.

அதைக்கொண்டு கட்டுப்படுத்திவிட்டால் நடவு செய்யும் வயல்களை விட 10 நாட்கள் முன்னதாகவே அறுவடைக்கு தயாராகி விடும். இதனால் பல பகுதிகளில் இயந்திரம் மூலம் நேரடி நெல் விதைப்பில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

**காஞ்சி மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை குறைந்தது! நான்கு மாதங்களில் 35 மி.மீ., குறைவு**

காஞ்சிபுரம்: காஞ்சிபுரம் மாவட்டத்தில், நடப்பாண்டிற்கான தென்மேற்கு பருவமழை,

கணிசமாக குறைந்துள்ளது. கடந்த ஆண்டு ஜூன் முதல் செப்டம்பர் வரை 381 மி.மீ., மழை பெய்தது. ஆனால், அதே காலகட்டத்தில், இந்தாண்டு 346 மி.மீ., மழை மட்டுமே பெய்துள்ளது. 35 மி.மீ., மழை குறைவாக பெய்துள்ளது.தமிழகத்தில், கடந்த ஜூன் மாதம் 3ம் தேதி, தென்மேற்கு பருவமழை துவங்கியது. தமிழகத்தின் மேற்கு தொடர்ச்சி மலைகள் அதிகமுள்ள கோயம்புத்துார், நீலகிரி, தேனி போன்ற மாவட்டங்களில், ஓரளவு மழை பெய்தாலும், வட மாவட்டங்களான, திருவள்ளூர், காஞ்சிபுரம், சென்னை போன்ற மாவட்டங்களில், கடந்த நான்கு மாதங்களில் கோடை காலம் போல, வெயில் சுட்டெரித்தது.குறிப்பாக, காஞ்சிபுரம் மாவட்டத்தில், மழையின் அளவு கணிசமாக குறைந்துள்ளது. மாவட்டத்தில் உள்ள 912 ஏரிகளில், 10 சதவீத ஏரிகளில் கூட தண்ணீர் இல்லை. ஆறுகள் வறண்டு காட்சியளிக்கின்றன. தென்மேற்கு பருவமழையை எதிர்பார்த்து காத்திருந்த வேடந்தாங்கல் ஏரி, ஒரு சொட்டுகூட தண்ணீர் இல்லாமல், வறண்டு கிடக்கிறது. காஞ்சிபுரம் மாவட்டத்தில், கடந்த ஜூன், ஜூலை, ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் ஆகிய நான்கு மாதங்களில் சராசரியாக 478 மி.மீ.,மழை பெய்ய வேண்டும். ஆனால், 346 மி.மீ., மழையே பெய்துள்ளது. கடந்த ஆண்டு பெய்த381 மி.மீ., மழையை காட்டிலும், 35 மி.மீ.,மழை குறைவாக பெய்துள்ளது. மழையின்றி, நிலத்தடி நீர்மட்டம் 400 அடிக்கும் கீழே சென்றுவிட்டது. பாலாற்றில் பருவமழை காலங்களில் தண்ணீர் ஓடி, 10 ஆண்டுகளுக்கும் மேலாகி விட்டது.இந்த நிலையில், நான்கு மாதங்களாக, மாவட்டத்தில் ஆங்காங்கே பெய்த மழையால், போதிய

தண்ணீரை சேமிக்கவும் முடியாமல், அவற்றை பயன்படுத்தி விவசாயமும் செய்ய முடியாமல், விவசாயிகள் தவித்து வருகின்றனர்.

### சூரிய ஒளி உலர்த்தி அமைக்க விருப்பமா?

திருவள்ளூர்: திருவள்ளூர் மாவட்டத்தில், சூரிய ஒளி உலர்த்தி எனப்படும் சோலார் டிரையர், 50 சதவீதம் மானியத்தில் வழங்கப்பட உள்ளது. திருவள்ளூர் மாவட்டத்தில், வெங்காயம், பச்சை மிளகாய் உள்ளிட்ட தோட்ட பயிர்களும், துளசி போன்ற மூலிகை செடிகளும் கணிசமான அளவிற்கு பயிரிடப்படுகிறது. இவர்கள் அறுவடை செய்தவற்றை உடனடியாக உலர்த்தும் வகையில், 'சோலார் டிரையர்' எனும் சூரிய ஒளி உலர்த்தி, மாவட்ட வேளாண் பொறியியல் துறை மூலம் மானிய விலையில் வழங்கப்படுகிறது.ஒரு சோலார் டிரையரின் விலை, 3.68 லட்சம் ரூபாய். அரசு மானியம் 50 சதவீதம் வழங்குகிறது. மீதம் உள்ள, 1.84 லட்சம் ரூபாயை மட்டும் விவசாயிகள் செலுத்த வேண்டும். திருவள்ளூர் மாவட்டத்தில் நடப்பு ஆண்டு, மூன்று சோலார் டிரையர் வழங்கப்பட உள்ளது. ஆர்வம் உள்ள விவசாயிகள், திருவள்ளூர், திருத்தணி மற்றும் பொன்னேரி ஆகிய இடங்களில் செயல்படும், வேளாண் பொறியியல் துறையில், உதவி செயற்பொறியாளர் அலுவலகங்களில் விண்ணப்பங்களை வழங்கலாம். இத்தகவலை, திருவள்ளூர் மாவட்ட வேளாண் பொறியியல் துறை அலுவலர் ஒருவர் தெரிவித்தார்.

### நேரடி விதைப்பில் நெல் பயிரிட்ட விவசாயிகள் மழைக்காக காத்திருப்பு

பொன்னேரி: நேரடி விதைப்பின் மூலம், நெல் பயிரிட்ட விவசாயிகள், பயிர்கள் வாடி வருவதால் மழைக்காக காத்திருக்கின்றனர். பொன்னேரி அடுத்த, போலாச்சியம்மன்குளம், ஆண்டார்மடம், திருப்பாலைவனம் உள்ளிட்ட பகுதிகளில், மழையை மட்டும் நம்பி விவசாயம் மேற்கொள்கின்றனர். மேற்கண்ட கிராமங்களில், நிலத்தடிநீர்

உவர்ப்பாக இருப்பதால், ஏரி மற்றும் குளங்களில் தேங்கும் மழைநீரை விவசாயத்திற்கு பயன்படுத்துகின்றனர். ஆண்டுக்கு ஒரு முறை மட்டும் சம்பா பருவத்தின் போது நெல் பயிரிடப்படுகிறது. தற்போது நேரடி விதைப்பின் மூலம், மேற்கண்ட கிராமங்களில் நெல் பயிரிடப்பட்டு உள்ளது. பயிர்கள் துளிர் விட்டு வளர்ந்து வரும் நிலையில், எதிர்பார்த்த அளவிற்கு போதிய மழை பொழியவில்லை. இதுவரை பருவ மழை துவங்காததால், பயிர்கள் வாடி வருவதை கண்டு விவசாயிகள் கவலை அடைந்து உள்ளனர். அடுத்த சில தினங்களுக்குள், மழை பொழியாவிட்டால், பயிர்கள் முற்றிலும் காய்ந்துவிடும் என்பதால், மழைக்காக விவசாயிகள் காத்திருக்கின்றனர்.

### மேட்டூர் நீர்மட்டம் 69 அடியாக சரிவு

மேட்டூர்: நீர்பிடிப்பு பகுதியில் நீடிக்கும் வறட்சி காரணமாக, நீர்வரத்து சரிந்ததால், மேட்டூர் அணை நீர்மட்டம் நேற்று, 69 அடியாக சரிந்தது.

கர்நாடகா அணைகளில் திறக்கப்பட்ட தண்ணீர் தொடர்ச்சியாக வந்ததால், மேட்டூர் அணை நீர்மட்டம், கடந்த, 1ம் தேதி, 70.63 அடியாகவும், 33.5 டி.எம்.சி.,யாகவும் அதிகரித்தது. கடந்த வாரம், காவிரி மேலாண்மை குழு கூட்டம் முடிந்ததால், தங்களது அணைகளில் திறக்கப்பட்ட நீரின் அளவை கர்நாடகா குறைத்தது. இதனால், கடந்த, 27 ம் தேதி, அதிகபட்சமாக, வினாடிக்கு, 27 ஆயிரத்து,500 கனஅடியாக இருந்த மேட்டூர் அணை நீர்வரத்து படிப்படியாக சரிந்தது. நேற்று அணைக்கு வினாடிக்கு, 7,610 கனஅடி நீர்வந்தது. அணையில் பாசனத்துக்கு வினாடிக்கு, 12 ஆயிரத்து,800 கனஅடி நீர் வெளியேற்றும் நிலையில், நீர்வரத்து குறைந்ததால், நேற்று அணை நீர்மட்டம், 69.15 அடியாகவும், நீர் இருப்பு, 31.97 டி.எம்.சி.,யாகவும் சரிந்தது.

**உளுந்து, துவரம் பருப்பின் விலை கிடுகிடு: லாரி ஸ்டிரைக் முடிந்தாலும் விலை எகிறுமாம்**

சேலம்: தமிழகத்தில் பருப்பு, பயிறு வகைகளுக்கு ஏற்பட்டுள்ள கடும் தட்டுப்பாடு காரணமாக, லாரி ஸ்டிரைக் முடிவுக்கு வந்தாலும், தொடர் பண்டிகை காரணமாக, பருப்பு வகைகளின் விலை, கிலோ, 200 ரூபாயை தொடும் என, தகவல்கள் வெளியாகி உள்ளன.

தமிழகத்தின் பருப்பு தேவையில், 15 சதவீதம், மாநிலத்தில் பூர்த்தி செய்யப்பட்டாலும், 85 சதவீத பருப்பு, மத்தியபிரதேசம், ராஜஸ்தான், உத்திரபிரதேசம், ஆந்திரா, கர்நாடகா மாநிலங்களில் இருந்தே விற்பனைக்கு வருகிறது. இந்த மாநிலங்களில் பெய்த மழை காரணமாக, விளைச்சலில் கடும் சரிவு ஏற்பட்டுள்ளது. குறைந்த அளவில் விளைந்த பயிறு வகைகள்,அந்தந்த மாநிலத்தின் தேவையை மட்டும் பூர்த்தி செய்வதாக உள்ளதால், தமிழகத்துக்கான பருப்பு வரத்து முற்றிலும் இல்லை. அமெரிக்க டாலருக்கு இணையான இந்திய ரூபாயின் மதிப்பு, 66 டாலரை தொட்டு விட்ட நிலையில், மியான்மர், துருக்கி, கனடா ஆகிய நாடுகளில் இருந்து, பருப்பை இறக்குமதி செய்ததாலும், அவற்றின் போக்குவரத்துச் செலவு, மத்திய, மாநில அரசுகளின் வரி ஆகியவற்றின் காரணமாக, இந்தியாவில் விற்பனை செய்யப்படும் விலைக்கே விற்பனை செய்ய வேண்டிய நிலைக்கு வியாபாரிகள் தள்ளப்பட்டுள்ளனர்.

சேலம் மாவட்ட அனைத்து வணிகர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜெயசீலன் கூறியதாவது: பயிறு, பருப்பு விலை கடந்த சில மாதங்களாக ஜெட் வேகத்தில் உயர்ந்து வருகிறது. இந்தியாவில், 1970-71ம் ஆண்டுகளில், 230 லட்சம் ஹெக்டேர் பருப்பு பயிர் பயிரிடப்பட்ட நிலையில், தற்போது மக்கள் தொகை பல மடங்கு அதிகரித்து விட்ட

நிலையில், சாகுபடி பரப்பு அதிகரிக்கவில்லை. தற்போதும், 230 லட்சம் ஹெக்டேர் மட்டுமே பயிரிடப்படுகிறது. இதே போல், ஆண்டுக்கு, 130-140 லட்சம் மெட்ரிக் டன் பயிறு வகைகளே விளைகிறது. நாம் வெளிநாடுகளை எதிர்பார்க்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். மத்திய, மாநில அரசு பயிறு வகைகளுக்கான ஆதார விலையை நிர்ணயம் செய்வதால், வியாபாரிகள் ஆதார விலையை விட கூடுதலாக விலை கொடுத்து, பயிறு வகைகளை வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த, 1975ல், பச்சை பயிறு, ஆதார விலை குவிண்டாலுக்கு, 1,200 ரூபாய், தற்போது, 4,850 ரூபாயாகவும், உளுந்து, துவரை ஆகியவற்றுக்கான ஆதார விலை, 1,700 ரூபாய் என்பது, 4,625 ரூபாயாக அதிகரித்துள்ளது. பருப்பு வகைகளின் விலையில் கடும் உயர்வு ஏற்பட்டு வருகிறது. கடந்த வாரம் வரை, வரத்து சரிவால் தட்டுப்பாடு ஏற்பட்டு, விலை உயர்ந்த நிலையில், லாரி ஸ்டிரைக் காரணமாக, நேற்று குவிண்டாலுக்கு, 1,000 ரூபாய் வரை, விலை உயர்ந்துள்ளது. லாரி ஸ்டிரைக் முடிவுக்கு வந்தாலும், இன்னும் சில வாரம் வரை, பருப்பு விலை தொடர்ந்து உயர்ந்து கொண்டே இருக்கவே வாய்ப்புள்ளது. இவ்வாறு, அவர் கூறினார். லாரி ஸ்டிரைக் காரணமாக, நேற்று பருப்பு வகைகளில், குவிண்டாலுக்கு, 1,000 ரூபாய் உயர்ந்துள்ள நிலையில், லாரி ஸ்டிரைக் முடிவுறும் நிலையில், தொடர் பண்டிகை காரணமாக பருப்பு தேவை அதிகரித்துள்ளதால், துவரம், உளுந்தம் பருப்பு விலை கிலோ, 200 ரூபாயை நெருங்கும் என, வியாபாரிகள் தெரிவித்தனர்.

## சாகுபடி குறித்த செயல்விளக்கம்

பெத்தநாயக்கன்பாளையம்: ஏத்தாப்பூர் மரவள்ளி மற்றும் ஆமணக்கு ஆராய்ச்சி நிலையத்தில், வேளாண் கல்லூரி மாணவியருக்கு, சாகுபடி குறித்த செயல்விளக்க முகாம் நடந்தது. இதில், தோட்டக்கலைத் துறை

அலுவலர் டாக்டர் வேல்முருகன், 'மரவள்ளி, ஆமணக்கு சாகுபடி, தொழில் நுட்ப முறைகள், நோய் கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து விளக்கினார். முகாமில், வேளாண் கல்லூரி மாணவியர்கள், தோட்டக் கலைத்துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**தண்ணீர் பற்றாக்குறையால் டெல்டாவில் சம்பா சாகுபடியில் ஆர்வமில்லை: நடப்பாண்டில் நெல் உற்பத்தி பாதிக்கும் அபாயம்**

கரூர்: டெல்டா மாவட்டங்களில், தண்ணீர் பற்றாக்குறையால், மேட்டூர் அணை திறந்து ஒரு மாதம் ஆனபோதும், எதிர்பார்த்த அளவு சம்பா சாகுபடி நடக்கவில்லை.நடப்பாண்டில் நெல் உற்பத்தி பாதிக்கும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது.

மேட்டூர் அணையில், போதிய அளவுக்குத் தண்ணீர் இல்லாததால், ஜூன் மாதம் தண்ணீர் திறக்கப் படவில்லை. இதனால், டெல்டா மாவட்டங்களில், காவிரி பாசனத்தை மட்டும் நம்பி உள்ள விவசாயிகள், நான்காவது ஆண்டாக குறுவை சாகுபடியை கைவிட்டனர். இந்நிலையில், சம்பா சாகுபடிக்கு ஆகஸ்ட், 9ம் தேதி அணை திறக்கப்பட்டது. இருப்பினும் அணையில் போதுமான அளவுக்கு தண்ணீர் இல்லாததால், வினாடிக்கு, 12 ஆயிரம் முதல், 15 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்படுகிறது. இதன் காரணமாக, டெல்டா மாவட்டங்களில் நடு மற்றும் கடைமடையில் பல பகுதிகளுக்குத் தண்ணீர் சென்றடையவில்லை. மேலும், தென் மேற்குப் பருவமழை இயல்பான அளவை விட, தஞ்சை மாவட்டத்தில், 34 சதவீதமும், நாகை, திருவாரூர் மாவட்டங்களில் தலா, 28 சதவீதமும் குறைவாக திவாகியது.

அணை திறந்து ஒரு மாதம் முடிவடையும் நிலையில், போர்வெல் வசதியுள்ள மற்றும் நேரடி விதைப்பு செய்யும் விவசாயிகள் மட்டுமே, சாகுபடிப் பணியைத் துவங்கி உள்ளனர். இதில், தஞ்சாவூர்

மாவட்டத்தில், 17 ஆயிரம் ஹெக்டரில் நடவும் பணியும், 18 ஆயிரம் ஹெக்டரில் நடவு செய்வதற்குத் தேவையான நாற்றங்கள் நடவும் நடந்துள்ளது. திருவாரூரில், 63 ஆயிரத்து,500 ஹெக்டரில் நேரடி விதைப்பும், 18ஆயிரத்து,500 ஹெக்டரில் நடவும், நாகை மாவட்டத்தில், 42 ஆயிரம் ஹெக்டரில் நேரடி விதைப்பும், 12 ஆயிரம் ஹெக்டரில் நடவுப் பணியும் நடந்து வருகிறது. ஆனால், பெரும்பான்மையாக இருக்கும் ஆற்றுப் பாசன விவசாயிகள், சாகுபடியைத் துவங்குவதில் சுணக்கம் காட்டி வருகின்றனர்.

இது குறித்து, வேளாண் வல்லுனர் கலைவாணன் கூறியதாவது: மேட்டூர் அணையில், தற்போது, 33 டி.எம்.சி. அளவுக்கு தண்ணீர் உள்ளது. அணையிலிருந்து வினாடிக்கு, 12 ஆயிரத்து, 800 கனஅடி தண்ணீர் திறந்து விடும் நிலையில், இன்னும், 16லிருந்து, 20 நாட்களுக்குத்தான் தண்ணீர் வழங்க முடியும். மேலும், 20 ஆயிரம் கனஅடிக்கு மேல் தண்ணீர் திறந்தால் மட்டுமே, கடை மடைப்பகுதிகளுக்கு நீர் சென்றடைய வாய்ப்பு உள்ளது. இந்த சூழ்நிலையில் சாகுபடி மேற்கொண்டுள்ள விவசாயிகளுக்கு நடவு பணிக்கும், நேரடி விதைப்புக்கு நெல் முளைக்க கூட போதுமான அளவு தண்ணீர் இல்லை. இதுமட்டுமின்றி, அக்., நவ., மாதங்களில் சாகுபடி பணிகளுக்கு குறைந்தபட்சம், 90 டி.எம்.சி., தண்ணீர் தேவைப்படும். வடகிழக்கு பருவமழையை பொருத்தவரை, அக்டோபர் மூன்றாவது வாரத்தில் தொடங்கி டிசம்பர் மாதம் வரையிலும் தொடரும். ஆனால், காலம் தாழ்ந்து சாகுபடிப் பணி தொடங்கப்பட்டால், ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் தண்ணீர் தேவை அதிகரிக்கும். ஆகையால், விவசாயிகள் சம்பா சாகுபடியை துவக்க அச்சத்தில் உள்ளனர். நடப்பாண்டில் நெல் உற்பத்தி பாதிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

**ஒட்டன்சத்திரம் சந்தையில்மாடுகள் விற்பனை மந்தம்**

ஒட்டன்சத்திரம்:லாரி ஸ்டிரைக் காரணமாக, கேரள வியாபாரிகள் ஒருசிலர் மட்டுமே வந்ததால் ஒட்டன்சத்திரம் மாட்டுச்சந்தையில் மாடுகள் விற்பனை மந்தமாக இருந்தது. இருந்த போதிலும் விவசாயிகளின் ஆர்வம் காரணமாக வளர்ப்பு கன்றுகுட்டி விற்பனை சூடு பிடித்தது.

ஒட்டன்சத்திரத்தில் நகராட்சி மாட்டுச்சந்தை வாரந்தோறும் திங்களன்று நடந்து வருகிறது. மணப்பாறை, பொள்ளாச்சி, திருப்பூர் பகுதிகளில் இருந்தும், உள்ளூர் பகுதிகளில் இருந்தும் ஏராளமான மாடுகள் விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. இவற்றை விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் வாங்கிச் செல்கின்றனர். இறைச்சி மாடுகளை அதிக அளவு கேரள வியாபாரிகள் வாங்கிச் செல்கின்றனர். வளர்ப்பு கன்றுக்குட்டி மற்றும் கறவை மாடுகளை விவசாயிகள் வாங்கிச் செல்கின்றனர். லாரி ஸ்டிரைக் காரணமாக கேரள வியாபாரிகள் ஒருசிலர் மட்டுமே மாடுகளை வாங்கினர். இதன்காரணமாக பல மாடுகள் விற்பனையாகாமல் தேக்கமடைந்தது. அதே சமயம் சில நாட்களாக ஒட்டன்சத்திரம் சுற்றியுள்ள கிராமப்பகுதிகளில், அவ்வப்போது மழை பெய்வதால் வளர்ப்பு கன்றுகளை வாங்குவதற்கு விவசாயிகள் ஆர்வம் காட்டினர்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

## அடுத்த 24 மணி நேரத்தில், வட மாவட்டங்களில் பலத்த மழைக்கு வாய்ப்பு

அடுத்த 24 மணி நேரத்தில், புதுச்சேரி, தமிழகத்தின் வட மாவட்டங்களில் ஆங்காங்கே பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளது என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரி ஒருவர் கூறியதாவது:

தென் மேற்குப் பருவ மழைக் காலத்தில் ஏற்பட்ட வெப்ப சலனத்தால், தற்போது மாநிலத்தின் பெரும்பாலான இடங்களில் மழை பெய்து வருகிறது. குறிப்பாக தென் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் பரவலாக மழை பதிவாகி வருகிறது.

கடந்த 24 மணி நேரத்தில், மாநிலத்தில் அனேக இடங்களில் மழை பதிவாகி இருக்கிறது.

இதில் அதிகபட்சமாக காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூரில் 100 மி.மீட்டர் மழை பதிவாகியது. அதற்கு அடுத்தப்படியாக காஞ்சிபுரம் மாவட்டம் கேவிகே காட்டுப்பாக்கத்தில் 80 மி.மீ, திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி, வந்தவாசி, புதுக்கோட்டை மாவட்டம் அரந்தாங்கி, ஆலங்குடியில் 70 மி.மீ, புதுக்கோட்டை மாவட்டம் மனமேல்குடி, திருவாரூர் மாவட்டம் வலங்கைமான், தருமபுரி மாவட்டம் மாரண்டஹள்ளி, கடலூர், அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டம் உள்ளிட்ட இடங்களில் 50 மி.மீட்டர் மழை பதிவாகியது.

பலத்த மழை:

புதுச்சேரி, தமிழகத்தின் வட மாவட்டங்களில், செவ்வாய்க்கிழமை ஆங்காங்கே இடியுடன் கூடிய பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளது. அடுத்து வரும் நாள்களுக்கு தமிழகத்தின் வட மாவட்டங்களில் பலத்த மழையை எதிர்பார்க்கலாம்.

சென்னை மாநகரைப் பொருத்தவரை, வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரங்களில், நகரின் ஒரு சில பகுதிகளில் இடியுடன் கூடிய மழை பெய்யும். நகரின் அதிகபட்ச வெப்பநிலை 93 டிகிரியாக இருக்கும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## வடகிழக்கு பருவமழை: பாதிப்புகளை எதிர்கொள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கை

வடகிழக்கு பருவமழை விரைவில் தொடங்கவுள்ள நிலையில், நீலகிரி மாவட்டத்தில் அதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சியர் பி.சங்கர் தெரிவித்தார்.

இதுகுறித்து உதகையில் செய்தியாளர்களிடம் திங்கள்கிழமை அவர் தெரிவித்ததாவது:

வடகிழக்கு பருவமழை இம்மாதம் தொடங்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மழை தொடர்பாக பேரிடர் மேலாண்மை ஆணையக் குழு மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடத்தப்பட்டுள்ளது. மழையால் ஏற்படும் பாதிப்புகளை தெரிவிக்க 24 மணி நேரமும் 1077-என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணை பயன்படுத்தலாம். இந்த எண்ணில் கட்டுப்பாட்டு அறையோடு, அவசர கால மையமும் செயல்பட்டு வருகிறது.

மாவட்டத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்படும் மக்கள் தங்குவதற்காக புயல் பாதுகாப்பு மையங்களும், பள்ளிகளும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளை உடனுக்குடன் மேற்கொள்ள வருவாய்த்துறை, பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை, தீயணைப்புத் துறை மற்றும் குடிமைப் பொருள்கள் துறை ஆகியவை தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

அபாயகரமான நிலையிலுள்ள மரங்களை வெட்டி அகற்றுவது தொடர்பாக முடிவெடுக்க வருவாய்த்துறை மற்றும் வனத்துறை அடங்கிய கூட்டுக்குழு அமைக்கப்பட்டுள்ளது. மாவட்டத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 10 இடங்களில் செல்லிடப்பேசியு டன் இணைக்கப்பட்ட எச்சரிக்கை அறிவிப்பு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பாரத் நகர், கூக்கல், அதிகரட்டி, ஜெகதளா உள்ளிட்ட பகுதிகளில் இம்மையங்கள் செயல்பட்டு வருகின்றன. கோட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்களிலும் வெள்ள கட்டுப்பாட்டு அறைகள் அமைக்கப்பட்டுள்ளன.

உதகை கோட்டாட்சியர் அலுவலகத்தை 0423- 2445577 என்ற எண்ணிலும், குன்னூர் கோட்டாட்சியர் அலுவலகத்தை 0423- 2206002 என்ற எண்ணிலும், கூடலூர் கோட்டாட்சியர் அலுவலகத்தை 04262-261295 என்ற எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம்.

அதேபோல, உதகை வட்டாட்சியர் அலுவலகத்தை 0423 -2442433 என்ற எண்ணிலும், குன்னூர் வட்டாட்சியர் அலுவலகத்தை 0423-2206102 என்ற எண்ணிலும், கோத்தகிரி வட்டாட்சியர் அலுவலகத்தை 04266- 271718 என்ற எண்ணிலும், குந்தா வட்டாட்சியர் அலுவலகத்தை 0423 -2508123 என்ற எண்ணிலும், கூடலூர் வட்டாட்சியர்

அலுவலகத்தை 04262- 261252 என்ற எண்ணிலும், பந்தலூர் வட்டாட்சியர் அலுவலகத்தை 04262- 220734 என்ற எண்ணிலும் தொடர்பு கொண்டு விவரங்களை தெரிவிக்கலாம்.

மாவட்டத்தில் கோக்கால் பகுதியில் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தால் 16 ஹெக்டேர் நிலங்களில் பயிரிடப்பட்டிருந்த மலைக்காய்கறிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக தோட்டக்கலைத் துறையினரின் அறிக்கை கிடைத்துள்ளது. பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்கக் கோரி அரசின் பார்வைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

மேலும் மாவட்டத்தில் கடந்த 2 வாரங்களில் நடத்தப்பட்ட வாக்காளர் சேர்ப்பு சிறப்பு முகாம்களில் 525 ஆன்லைன் விண்ணப்பங்கள் உள்பட 11,259 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. இவற்றில் புதிதாக பெயர் சேர்க்கக்கோரி 7,523 விண்ணப்பங்களும், பெயர் நீக்கக்கோரி 414 விண்ணப்பங்களும், திருத்தம் மேற்கொள்ள 2,236 விண்ணப்பங்களும், ஒரே தொகுதிக்குள்ளேயே திருத்தங்கள் மேற்கொள்ளக்கோரி 1,060 விண்ணப்பங்களும் பெறப்பட்டுள்ளதாகவும் ஆட்சியர் பி.சங்கர் தெரிவித்தார்.

**கால்நடைகளுக்கான பாரம்பரிய சிகிச்சை முகாம்**

ஈரோடு மாவட்டம், பெருந்துறை அருகே ஆவரங்காட்டுவலசு கிராமத்தில் கால்நடைகளுக்கான பாரம்பரிய சிறப்பு சிகிச்சை முகாம் திங்கள்கிழமை நடைபெற்றது.

கவுந்தப்பாடி ஜெயம் பிராணிகள் நல அறக்கட்டளை சார்பில் இம்முகாம் நடைபெற்றது. ஜெயம் பிராணி நல அறக்கட்டளையின் நிறுவனத் தலைவர் டாக்டர் கே.வி.கோவிந்தராஜ் தலைமை வகித்தார். புளூர்ட்டான் இந்தியா நிறுவன மேலாளர் பி.செந்தில்ராஜன் முன்னிலை வகித்தார்.

உலக மகளிர் உரிமைக் கழக உறுப்பினர் ஜி.ஜெயலட்சுமி வரவேற்றார். இம்முகாமில்

நோய் எதிர்ப்பு சக்தி வழங்கும் மூலிகைகள் அடங்கிய மூலிகை மசால் உருண்டைகள் 59 மாடுகளுக்கு வழங்கப்பட்டன. சோற்றுக்கற்றாழை, பிரண்டை, பீனாரி சங்கு, வேப்பிலை, ஆடாதொடை, வேலிப்பருத்தி, பாகல் இலை, நொச்சி இலை, சுண்டைக்காய், எருக்கன் இலையை எடுத்து இடித்து பிழிந்து சாறு எடுத்து 140 ஆடுகளுக்கு குடற்புழு நீக்க மருந்து கொடுக்கப்பட்டது.

அறக்கட்டளையின் தலைவர் டாக்டர் கோவிந்தராஜ் பேசும் பொழுது, கால்நடைகளுக்கு இந்த மூலிகை மருந்தினை கொடுக்கும் பொழுது நோய் எதிர்ப்பு சக்தி ரத்தத்தில் உருவாகிறது. எந்தவித பக்க விளைவுகளும் ஏற்படுவதில்லை. செலவும் குறைவு. சோற்றுக்கற்றாழை, வாழைப்பூ, பிரண்டை, அருகம்புல், வல்லாரை, மொசு மொசுக்கை, தூதுவளை உள்ளடக்கிய மூலிகைகள் கிராமப்புறங்களில் எளிதாக கிடைக்கிறது. அதனுடன் சுக்கு, மிளகு, திப்பிலி, பெருங்காயம், கடுக்காய், சீரகம், சிறிய வெங்காயம், கொத்தமல்லி விதை, தேங்காய் முதலான சமையல் அறை சாமான்களை கூட அரைத்து உருண்டையாக உருட்டிக் கொண்டு மஞ்சள் தூளில் பிரட்டி எடுத்துக் கொண்டு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை கால்நடைகளுக்கு கொடுக்கும் பொழுது அதன் உடம்பில் நோய் எதிர்ப்பு சக்தி உருவாகிறது என்றார்.

**சத்தியில் பரவலாக மழை**

சத்தியமங்கலத்தில் பல இடங்களில் பரவலாக மழை பெய்து வருகிறது.

சத்தியமங்கலத்தை அடுத்துள்ள தாளவாடி, தொட்டபுரம், தொட்டகாஜனூர், மல்லன்குழி ஆகிய பகுதியில் திங்கள்கிழமை பலத்த மழை பெய்தது. இதனால் சாலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்து

ஓடியது. தொடர்ந்து 2 மணி நேரம் நீடித்த மழையால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. பள்ளி மாணவ, மாணவிகள் மிகுந்த அவதிக்குள்ளா

கினர்.வனச்சிற்றோடைகளில் வெள்ள நீர் வழிந்தோடியது.

தலமலை, ராமர்பாதம், நெய்தாள புரம் பகுதியில் பெய்த மழையால் காய்ந்த போன செடிகள் துளிர்விட ஆரம்பித்துள்ளன. கடம்பூர் மலைப்பகுதியிலும் கனமழை நீடித்தது.

**வெள்ளக்கோவிலில் மிதமான மழை**

வெள்ளக்கோவில் பகுதியில் திங்கள்கிழமை பரவலாக மழை பெய்தது.

திங்கள்கிழமை காலை முதல் வெயில் சுட்டெரித்த நிலையில், பிற்பகல் 2 மணியளவில் பலத்த மழை பெய்தது. இதனால், காங்கயம் சாலை, பழைய சந்தைப் பேட்டை, ஈஸ்வரன் கோயில், காவல் நிலையம் உள்ளிட்ட பகுதிகளில் மழை நீர் கரைபுரண்டு ஓடியது. பலத்த மழை காரணமாக, விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**குண்டேரிபள்ளம் அணை நிரம்பி வழிகிறது**

ஈரோடு மாவட்டத்தில் கடந்த ஒரு வாரகாலமாகவே பரவலாக பல இடங்களில் பலத்த மழை பெய்து வருகிறது. இதேபோல் ஞாயிற்றுக்கிழமை இரவும் மாவட்டத்தின் பல இடங்களில் நல்ல மழை பெய்தது.

கோபியை அடுத்த டி.என்.பாளையம் அருகே உள்ள குண்டேரிபள்ளம் அணை கடந்த சில தினங்களுக்கு முன்பு நிரம்பியது. இதையொட்டி அணை பகுதியோரம் உள்ள கிராம மக்களுக்கு வெள்ள எச்சரிக்கை விடப்பட்டது.

இந்த மழையால் அணைக்குத் தொடர்ந்து தண்ணீர் வரத்து வரதொடங்கி உள்ளது. அணைக்கு வரும் தண்ணீர் அப்படியே வெளியேற்றப்பட்டு

வருகிறது. விநாடிக்கு 91 கன அடி வீதம் தண்ணீர் வெளியேறி கொண்டிருக்கிறது.

இதேபோல் கோபி, சத்தியமங்கலம், பவானிசாகர், கொடிவேரி அணை உள்பட பல இடங்களில் ஞாயிற்றுக்கிழமை இரவு மழை பெய்தது. இந்த மழையால் வெப்பம் தணிந்து குளிர்ச்சியான சீதோஷ்ண நிலை நிலவியது.

**பல்லடம் பகுதியில் தொடர் மழை: விதைப்பு பணி தீவிரம்**

பல்லடம் வட்டாரப் பகுதியில் பரவலாக மழை பெய்து வருவதால் விதைப்பு பணி தீவிரமடைந்துள்ளது.

புரட்டாசி பட்டம், மானாவாரி பயிர்களுக்கு ஏற்றது. தற்போது, மானாவாரியாக விதைக்கப்படும் பயிர்கள், தை மாதத்தில் அறுவடைக்கு வரும். பருவ மழையை மட்டுமே நம்பி வளரும் இப்பயிர்கள், உரம், மருந்து போன்ற செலவுகள் இல்லாமலேயே பலன் கொடுக்கும். கடந்த சில நாள்களாகப் பெய்து வரும் மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

மழை காரணமாக, கம்பு, சோளம் உள்ளிட்ட தீவனப் பயிர்களையும், தட்டை, உளுந்து, கொள்ளு, பாசிப்பயறு, துவரை உள்ளிட்ட பயறு வகைகளையும் சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர். இதனால், விதை தானியம் கொள்முதல் சூடுபிடித்துள்ளது.

காங்கயம் மார்க்கெட்டில் விதை சோளம் கிலோ ரூ. 36-இல் இருந்து ரூ. 37 ஆக அதிகரித்துள்ளது. கொள்ளு கிலோ ரூ. 32, நரிப்பயறு கிலோ ரூ. 80, நாட்டு ரக கம்பு கிலோ ரூ. 25, ராகி கிலோ ரூ. 20 முதல் ரூ. 25-க்கு விற்பனை செய்யப்படுகிறது.

குண்டடம் மார்க்கெட்டில் சோளம் ரூ. 40, தட்டை, உளுந்து, மொச்சை ஆகியன கிலோ ரூ. 60, பாசிப்பயறு ரூ. 110, கொள்ளு ரூ. 35, நரிப்பயறு ரூ. 78-க்கு விற்பனை செய்யப்படுகிறது.

### மேட்டூர் அணை நீர்மட்டம் குறைவு

மேட்டூர் அணையின் நீர்மட்டம் 68.74 அடியாகவும், நீர் இருப்பு 31.62 டி.எம்.சி.,யாகவும் உள்ளதால் டெல்டா பாசனத்திற்காக திறக்கப்படும் நீரின் அளவு, 12,000 கனஅடியிலிருந்து 10,000கனஅடியாக குறைக்கப்பட்டது. மேலும் கிழக்கு மற்றும் மேற்கு கால்வாய் பாசனத்திற்காக திறக்கப்படும் நீரும், 800 கனஅடியிலிருந்து 600 கனஅடியாக குறைக்கப்பட்டது.

### மருத்துவ குணமுள்ள சாக்லேட்!




உலகின் முதல் மருத்துவ குணமுள்ள சாக்லேட்டை அமெரிக்க நிறுவனம் உருவாக்கியுள்ளதாகத் தெரிவித்தது.

சாக்லேட்டில் பயன்படுத்தப்படும் முக்கியப் பொருளான "கக்காவோ', உயிரணுக்களின் அழிவைத் தாமதப்படுத்தும் குணம் கொண்டது. மேலும் அதில் உள்ள பல தாதுப் பொருள்கள், ரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்தி "நல்ல கொலஸ்ட்ரால்' அளவை சீராக வைக்கும் தன்மை கொண்டது.

பெரும்பாலான சாக்லேட்டுகளில் கொழுப்பு மற்றும் சர்க்கரை 70 சதவீத அளவு உள்ளது. இதனால் "கக்காவோ'வின் மருத்துவ குணங்களின் முழுப் பயனும் கிடைக்காமல் போய்விடுகிறது.

ஆனால் கொழுப்பையும் சர்க்கரையையும் குறைத்தால் சாக்லேட்டில் உள்ள கோக்கோவின் கடுமையான கசப்புத் தன்மை வெளிப்பட்டுவிடும். அத்துடன் சாக்லேட் என்றாலே இனிப்பு என்பது பொய்த்துவிடும். இந்த நிலையில், சாக்லெட்டில் கொழுப்பு மற்றும் சர்க்கரை அளவைக் குறைத்து, "கக்காவோ'வின் முழு மருத்துவப் பயனையும் கிடைக்கச் செய்யும் முறையை அமெரிக்காவைச் சேர்ந்த ஒரு நிறுவனம் கண்டுபிடித்திருக்கிறது. கோக்கோ செடியின் தண்டின் பகுதி மிகச் சிறிய அளவில் சேர்க்கப்படுவதன் மூலம் "கக்காவோ'வின் கசப்புத் தன்மையைக் குறைக்க முடியும் என்று அந்த நிறுவனம் கண்டுபிடித்தது. இதன் மூலம் சாக்லேட்டில் சேர்க்க வேண்டியுள்ள சர்க்கரை, கொழுப்பின் அளவைப் பாதியாகக் குறைக்க முடியும். இதையடுத்து, இனிப்புச் சுவை சற்றும் குறையாமல், "கக்காவோ'வின் மருத்துவ குணங்கள் முழுமையாக சாக்லேட் தின்பவருக்கு கிடைக்கிறது.

இந்தக் கண்டுபிடிப்பின் அடிப்படையில், முதல் கட்டமாக உருவாக்கப்பட்டுள்ள மாதிரி சாக்லேட்டுகளில் கொழுப்பும் சர்க்கரையும் பாதி அளவாகக் குறைந்துள்ளது. அவற்றை மேலும் குறைத்து, இனிமை குறையாத, மருத்துவ குணமுள்ள சாக்லேட்டுகளை உருவாக்க அந்த நிறுவனம் தொடர்ந்து ஆராய்ச்சி செய்து வருகிறது. இந்தத் தகவலை "மெட்ரோ' மருத்துவ ஆய்வேடு தெரிவித்துள்ளது.

தினத்தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## இதய ஆரோக்கியத்திற்கு உதவும் புரத உணவு



சரியான அளவு புரதம் சாப்பிடுவதனால் ஏற்படும் நன்மைகள் நாம் அனைவரும் அறிந்த ஒன்றுதான். ஆனால் புரதச்சத்து நிறைந்த வெவ்வேறு விதமான உணவுகளை உண்பதால் நம் ஆரோக்கியம் எந்த அளவுக்கு மேம்படும் என்பதைக் கண்டுபிடித்திருக்கிறார்கள் இங்கிலாந்தில் உள்ள ஈஸ்ட் ஏங்க்லியா பல்கலைக்கழக ஆய்வாளர்கள்.

இதற்கு முந்தைய ஆய்வுகளின் முடிவுகள் அதிக புரதம் உண்பதால் ரத்த அழுத்தம் குறைவதற்கான ஆதாரங்களை முன்வைத்தன என்கிறார் இந்த ஆய்வின் மூத்த ஆய்வாளர் ஏமி ஜென்னிங்ஸ். ஆனால், விலங்கு மற்றும் தாவரங்களில் இருந்து கிடைக்கும் புரதங்களில் எது மிகவும் நன்மையானது என்பதைக் கண்டறிய இறைச்சி மற்றும் காய்கறிகளில் உள்ள ஆர்ஜினின், சிஸ்டீன், க்ளுட்டாமிக் ஆசிட், கிளைசீன், ஹிஸ்டிடீன் லியுசீன் மற்றும் டைரோசீன் ஆகிய ஏழு வெவ்வேறு அமினோஅமிலங்கள் ஒவ்வொன்றும் ஆரோக்கியமான எடையுள்ள பெண்களின் இதய ஆரோக்கியத்தை எவ்வாறு பாதிக்கின்றன என்பதை ஆய்வு செய்தது ஆய்வாளர் ஜென்னிங்ஸ் தலைமையிலான ஆய்வுக்குழு. மேற்குறிப்பிட்டுள்ள அமினோஅமிலங்களை அதிக அளவில்

உட்கொண்டவர்களின் ரத்த அழுத்தமும், தமனியிலுள்ள இறுக்கத்தன்மையும் குறைவாக இருந்தது கண்டறியப்பட்டுள்ளது. சுமார் 2000 பெண்கள் பங்குபெற்ற இந்த ஆய்வின் முடிவுகள் 'தி ஜர்னல் ஆப் நியூட்ரிஷன்' என்னும் ஊட்டச்சத்து தொடர்பான ஆய்விதழில் வெளியாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.இந்த ஆய்வில் கண்டறியப்பட்டுள்ள மிகவும் ஆச்சரியத்தக்க உண்மை என்னவென்றால், மேற்குறிப்பிட்ட 7 அமினோ அமிலங் களை உட்கொள்வதால் ஒருவருடைய ரத்த அழுத்தம் மற்றும் தமனியின் இறுக்கத்தன்மையில் ஏற்படும் நல்ல மாற்றமானது புகைப்பழக்கம் மற்றும் மது அருந்துதல் ஆகியவற்றை விடுவதால் ஏற்படும் மாற்றத்திற்கு நிகராக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.ஆக மொத்தத்தில், உயிரைக்கொல்லும் ஸ்ட்ரோக் அல்லது இதர இதயக்கோளாறுகளை ஏற்படுத்தக்கூடிய அதிக ரத்த அழுத்தத்தை, தாவர மற்றும் விலங்குகளிலிருந்து கிடைக்கும், குறிப்பிட்ட 7 அமினோ அமிலங்கள் கொண்ட, அதிக புரதச்சத்து நிறைந்த உணவுகள் மூலமாக குறைத்து மிகவும் சுலபமாக நீண்ட நாள் வாழமுடியும் என்பது மகிழ்ச்சியான செய்திதானே!

## அந்தேரியில் அரியவகை மஞ்சள் கால் பட்டன் காடை மீட்பு



மும்பை,

அந்தேரியில் அரியவகை மஞ்சள் கால் பட்டன் காடை மீட்கப்பட்டுள்ளது.

## மஞ்சள் கால் பட்டன் காடை

மும்பை அந்தேரி மேற்கு பகுதியில் உள்ள பவன் கல்லூரி அருகே சம்பவத்தன்று சிறிய பறவை ஒன்றை காக்கைகள் சூழ்ந்து கொண்டு தாக்குவதாக இயற்கை நல ஆர்வலர் பிரபு ராஜ்குமார் என்பவருக்கு தகவல் கிடைத்தது. இதையடுத்து அவர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று அந்த பறவையை மீட்டார். பின்னர் அவர் மீட்கப்பட்ட பறவையின் படத்தை பறவைகள் நிபுணர் ஒருவருக்கு அனுப்பி வைத்தார். அப்போது மீட்கப்பட்டது அரியவகை பறவை இனமான மஞ்சள் கால் பட்டன் காடை என்பது தெரியவந்தது.

## சிறியவகை பறவையினம்

இதையடுத்து பிரபு ராஜ்குமார் மஞ்சள் கால் பட்டன் காடையை தானே வனத்துறையினரிடம் ஒப்படைத்தார். மீட்கப்பட்ட காடைக்கு தற்போது சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும், விரைவில் அது இயற்கை வாழிடங்களில் விடப்படும் என தானே வனத்துறை அதிகாரி ஒருவர் கூறினார்.

அரிய வகை மஞ்சள் கால் பட்டன் காடை சிறிய வகை பறவையினத்தை சார்ந்தது ஆகும். இந்த பறவை இந்திய துணைக்கண்டம் மற்றும் தெற்காசிய பகுதிகளில் அதிகளவில் காணப்படுகிறது.

# கட்டணம் செலுத்திய ‘விவசாயிகளுக்கு மின் இணைப்பு கொடுங்கள்’ அதிகாரிகளுக்கு பட்னாவிஸ் உத்தரவு



மும்பை,

ஜனநாயக தினத்தையொட்டி நேற்று மந்திராலயாவில், தேங்கிக் கிடந்த 11 மாவட்டங்களை சேர்ந்த மின் இணைப்பு தொடர்பான 15 புகார்களை முதல்–மந்திரி தேவேந்திர பட்னாவிஸ் தீர்த்து வைத்தார். பின்னர், கட்டணம் செலுத்திவிட்டு மின் இணைப்பு வழங்கப்படாமல், நிலுவையில் இருக்கும் விவசாயிகளுக்கு உடனடியாக மின் இணைப்பு ஏற்படுத்திக் கொடுங்கள் என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அவர் உத்தரவு பிறப்பித்தார்.

மேலும், இந்த பணியை 2016–ம் ஆண்டு மார்ச் மாதத்துக்குள் முடித்துவிட வேண்டும் என்று அறிவுறுத்திய அவர், குறிப்பிட்ட காலவரையறைக்குள் பணியை முடிக்காத ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தத்தை ரத்து செய்யுமாறு அதிகாரிகளை எச்சரித்தார். இதைத்தொடர்ந்து, புதிதாக நியமிக்கப்பட்டுள்ள ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை சந்தித்து முதல்–மந்திரி தேவேந்திர பட்னாவிஸ் கலந்துரையாடினார். நிர்வாகத்தில் மாற்றம் கொண்டு வர பரிந்துரை அளிக்குமாறு அவர்களிடம் கேட்டுக் கொண்டார்.

## கர்நாடகத்தில் 6 மாதத்தில் 516 விவசாயிகள் தற்கொலை மாநில அரசு அதிகாரப்பூர்வ தகவல்





பெங்களூரு,

கர்நாடகத்தில் தென்மேற்கு பருவமழை பொய்த்துப்போனதால் பல மாவட்டங்களில் வறட்சி நிலவுகிறது. இதன் காரணமாக மாநிலத்தில் மொத்தம் 136 தாலுகாக்கள் வறட்சி பாதித்த பகுதிகள் என மாநில அரசு அறிவித்துள்ளது. மழையை நம்பி விவசாயம் செய்த விவசாயிகள் கடன் தொல்லை, போதிய விளைச்சல் இன்மை உள்பட பல்வேறு காரணங்களினால் தற்கொலை செய்து வருகிறார்கள். கடந்த 6 மாதங்களில் மட்டும் கர்நாடகத்தில் மொத்தம் 516 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டதாக மாநில அரசு நேற்று அதிகாரப்பூர்வமாக அறிவித்தது. அதில் அதிகபட்சமாக மண்டியா மாவட்டத்தில் 56 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டிருப்பதாக குறிப்பிடப்பட்டு உள்ளது.

## உடைந்த இதயத் தசைகளை ஒட்டவைக்கும் அதிநவீன 'வெல்க்ரோ' திசு!




நாம் அணியும் சட்டைகள் அல்லது பொருட்களை எடுத்துச்செல்ல பயன்படுத்தும் பைகள் மற்றும் காலில் அணியும் ஷுக்கள் என பலவற்றிலும் பயன்படுத்தப்படும், அழுத்தினால் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்து ஒட்டிக்கொண்டுவிடும் 'வெல்க்ரோ' பற்றி நம்மில் பலருக்கும் தெரிந்திருக்கும். இதுவரையில் சராசரியான சில பயன்பாடுகளில் மட்டுமே உதவிவந்த வெல்க்ரோ தொழில்நுட்பமானது, எதிர் காலத்தில் மாரடைப்பு உள்ளிட்ட இதய நோய்களால் சேதமடைந்த இதயத் திசுக்கள் மீண்டும் வளர உதவும் 'கார்டியாக்' இதயத் திசுக்களால் ஆன 'உயிருள்ள பேண்டேஜுகள்' உருவாக்க பயன்படும் என்று ஆச்சரியப்படுத்துகிறார்கள் கனடாவிலுள்ள டொராண்டோ பல்கலைக்கழக விஞ்ஞானிகள்!தற்போது 'வெல்க்ரோ திசு' என்று அழைக்கப்படும் இந்த உயிரியல் தொழில்நுட்பத்தில், நுண்ணிய துளைகள் மற்றும் கொக்கிகள் உள்ள பாலிமரால் ஆனா சல்லடை போன்ற ஒரு அமைப்பில் இதய உயிரணுக்கள் வளர்க்கப்படும். இதய உயிரணுக்கள் கொண்ட இத்தகைய ஒரு சல்லடையின் மேல் மற்றொன்றை வைத்தபோது வெல்க்ரோ போலவே அவை ஒன்றுடன்

ஒன்று பின்னிப்பிணைந்து ஒட்டிக்கொண்டது தெரியவந்தது.


இதன்மூலம் பல இதய உயிரணு அடுக்குகளை ஒன்றுசேர்த்து ஒரு இதயத்திசு உருவாக்கப்பட்டது. இந்தத் திசுவில் உள்ள உயிரணு அடுக்குகளுக்கு இடையில் உள்ள பாலிமர் சல்லடை காலப்போக்கில் ஆபத்தில்லாமல் தானாகவே சிதைந்துபோனதும் கண்டறியப்பட்டது.

இந்த தொழில்நுட்பம் மூலம் நான்கு நாட்கள் வளர்க்கப்பட்ட எலியின் இதயத் தசையானது தானாகவே சுருங்கி விரிந்ததும் கண்டறியப்பட்டது. ஆக இந்த வெல்க்ரோ தொழில்நுட்பத்தின் மூலம் தானாகவே சுருங்கி விரியும் இதயத் தசையை உருவாக்க முடியும் என்று ஆய்வாளர்கள் கண்டறிந்தனர்.

இந்த வெல்க்ரோ திசுவைப் பயன்படுத்தி மாரடைப்பால் பாதிக்கப்பட்ட இதயத்தில் உள்ள திசுக்காயங்கள் அல்லது காயங்கள் மீது இருக்கும் வடுக்களை குணப்படுத்தும் திசுப்பட்டைகளை உருவாக்க முடியும் என்கிறார் தலைமை ஆய்வாளர் மைல்ஸ் மான்ட்கொமெரி.

அதெல்லாம் சரி, தற்போது சோதனைக்கூடத்தில் வெற்றியடைந்துள்ள இந்த வெல்க்ரோ திசு தொழில்நுட்பமானது மனிதர்களின் உடலுக்குள் இதயத்திசு காயங்களை எப்படி குணப்படுத்துகிறது என்பதை ஆய்வுசெய்வதுதான் மிகவும் முக்கியமான பரிசோதனையாகும் என்கிறார்கள் பிற இதய மருத்துவ வல்லுனர்கள்!

## புற்றணுக்களை ஆரோக்கியமான உயிரணுக்களாக மாற்ற முடியும்!



ஆரோக்கியமாக வளர்ந்துகொண்டிருக்கும் ஒரு உயிரணு, உணவு, சுற்றுச்சூழல் மற்றும் மரபியல் சார்ந்த பல்வேறு காரணங்களால் திடீரென்று உயிரணு வளர்ச்சியை கட்டுப்படுத்தும் உயிரியல் சமிஞ்ஞைகளின் கட்டுப்பாட்டை மீறி, அசுர வளர்ச்சியுடன் தொடர்ந்து வளர்ந்துகொண்டே இருந்தால் அதுவே புற்றணு எனப்படுகிறது. இத்தகைய பல புற்றணுக்கள் சேர்ந்து புற்றுநோய் உருவாகிறது.

புற்றணுக்கள் என்பவை அடிப்படையில் கட்டுப்பாட்டை மீறி வளரும் ஆரோக்கியமான உயிரணுக்கள் தான் என்பதால் அவற்றை நீக்கும் சிகிச்சை அளிப்பது என்பது மிகவும் சிக்கலானது. ஏனென்றால் ஒரு ஆரோக்கியமான உயிரணுவுக்கும் புற்றணுவுக்குமான வித்தியாசம் மிகவும் குறைவு! அதனால் புற்றுநோய் சிகிச்சையில் ஆரோக்கியமான உயிரணு மற்றும் திசுக்களும் கொல்லப்படுகின்றன. இந்த நடைமுறைச் சிக்கலைத் தவிர்த்து புற்றுநோயை குணப்படுத்த நவீனமான பல புதிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அத்தகைய முயற்சிகளில் ஒன்றாக, மைக்ரோ ஆர்.என்.ஏ எனப்படும் உயிரியல் மூலக் கூறுகளை புற்றணுக்களுக்குள் செலுத்துவதன் மூலம் அவற்றை மீண்டும் ஆரோக்கியமான உயிரணுக் களாக மாற்ற முடியும் என்பதை நிரூபித்திருக்கிறார்கள் அமெரிக்காவில் உள்ள மயோ கிளினிக் ஆய்வு மையத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள்!

உயிரணுக்கள் எப்படி வளர வேண்டும் என்பதை நிர்ணயிக்கும் மைக்ரோ ஆர்.என்.ஏக்கள் PLEKHA 7 எனப்படும் ஒரு புரத உற்பத்தியையும் கட்டுப்படுத்துகின்றன. ஆனால் புற்றணுக்களில், இந்த புரதத்தின் அளவு குறைவாக இருந்ததை மயோ கிளினிக் ஆய்வாளர்கள் கண்டறிந்தனர். அதனால் PLEKHA 7 புரதத்தின் உற்பத்தியை கட்டுப்படுத்தும் மைக்ரோ ஆர்.என்.ஏக்களை புற்றணுக்களுள் செலுத்தி PLEKHA 7 புரத உற்பத்தியை ஆரோக்கியமான அளவுக்கு கொண்டுவர முயற்சித்தனர். அதிர்ஷ்டவசமாக அந்த முயற்சி வெற்றி பெற்று, மைக்ரோ ஆர்.என்.ஏ செலுத்தப்பட்ட புற்றணுக்கள் ஆரோக்கியமான உயிரணுக்களாக மாறிய அதிசயம் நடந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

சோதனைக்கூடத்தில் வளரும் மனித மார்பக மற்றும் நீர்ப்பை புற்றணுக்கள் மீது மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த ஆய்வு முயற்சி மனிதர்கள் மீது மேற்கொள்ளப்பட இன்னும் சில காலம் பிடிக்கும் என்றாலும் புற்றுநோய் ஆய்வில் இது ஒரு முக்கியமான திருப்புமுனையாக பார்க்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது!

## வெப்பசலனம்: தமிழகத்தின் அனேக இடங்களில் இன்று மழை பெய்யும் வானிலை ஆய்வு மையம் அறிவிப்பு




சென்னை,

வெப்பசலனம் காரணமாக தமிழகத்தின் அனேக இடங்களில் இன்று மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் அறிவித்து உள்ளது.

இதுகுறித்து சென்னை வானிலை ஆய்வு மைய அதிகாரி ஒருவர் கூறியதாவது:-

வெப்பசலனம்

தென்மேற்கு பருவமழை காலத்தில் ஏற்பட்ட வெப்பச்சலனம் காரணமாக தற்போது தமிழகத்தில் அனேக இடங்களில் கடந்த சில நாட்களாக மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக முக்கியமாக தென் மாவட்டங்களில் நல்ல மழை பதிவாகி உள்ளது.நீடிக்கும் இந்த வெப்பசலனம் காரணமாக அடுத்த 24 மணி நேரத்தில் தமிழகம் மற்றும் புதுச்சேரியின் அனேக இடங்களில் இன்று பரவலாக மழை பெய்யும். சென்னையை பொருத்தமட்டில் வானம் மேகமூட்டத்துடனே

காணப்படும். நகரின் ஒரு சில இடங்களில் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்ய வாய்ப்பு உள்ளது.

காஞ்சீபுரத்தில் அதிக மழைநேற்று காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேர கணக்கீட்டின்படி, காஞ்சீபுரம் மாவட்டம் உத்திரமேரூரில் அதிகபட்சமாக 10 செ.மீ. மழை பதிவாகி உள்ளது. அடுத்தபடியாக அதே மாவட்டம் காட்டுக்குப்பத்தில் 8 செ.மீ. மழை பதிவாகி உள்ளது. திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி, வந்தவாசி புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி மற்றும் ஆலங்குடி ஆகிய பகுதிகளில் 7 செ.மீ. மழை பதிவாகி இருக்கிறது. இதை தவிர தர்மபுரி, திருவாரூர், கடலூர், தஞ்சாவூர், நாகப்பட்டினம் உள்ளிட்ட பல பகுதிகளிலும் பரவலான மழை பதிவாகி உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## குன்னூரில் நடந்த ஏலத்தில் 83 சதவீத தேயிலை தூள் விற்பனை



குன்னூர்,

குன்னூரில் நடந்த ஏலத்தில் 83 சதவீத தேயிலை தூள் விற்பனையானது.

<u>தேயிலை ஏலம்</u>

குன்னூர் தேயிலை வர்த்தகர் அமைப்பின் சார்பில் வாரந்தோறும் வியாழன், வெள்ளி ஆகிய நாட்களில் தேயிலை ஏலம் நடைபெற்று வருகிறது. விற்பனை எண் 40–க்கான ஏலம் கடந்த வாரம் நடைபெற்றது. ஏலத்துக்கு மொத்தம் 12 லட்சத்து 90 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வந்தது. இதில் 9 லட்சத்து 14 ஆயிரம் கிலோ இலை ரகமாகவும், 3 லட்சத்து 76 ஆயிரம் கிலோ டஸ்ட் ரகமாகவும் இருந்தது. ஏலத்தில் 83 சதவீத தேயிலை தூள் விற்பனையானது.

விற்பனையான தேயிலை தூளின் விலையில் மாற்றம் இல்லாமல் கடந்த வார விலையிலே ஏலம் சென்றது. சி.டி.சி. தேயிலை தூளிள் உயர்ந்த பட்ச விலையாக கிலோ ரூ.108–க்கு ஏலம் சென்றது. ஆர்த்தோடக்ஸ் தேயிலை தூள் கிலோ ரூ.264–க்கு உயர்ந்த பட்ச விலையாக விற்பனையானது. சராசரி விலையாக இலை ரகத்தின் சாதாரண வகை

தேயிலை தூள் ஒரு கிலோ ரூ.38 முதல் ரூ.40 வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் கிலோ ரூ.100 முதல் ரூ.120 வரையிலும் ஏலம் சென்றது.

<u>அடுத்த ஏலம்</u>

டஸ்ட் ரகத்தின் சாதாரண வகை ரூ.50 முதல் ரூ.60 வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் ரூ.110–ல் இருந்து ரூ.175 வரையிலும் ஏலம் சென்றது. ஏலத்தில் விற்பனையான தேயிலை தூளின் மொத்த மதிப்பு ரூ.6 கோடியே 98 லட்சம் ஆகும். தேக்கம் அடைந்த 17 சதவீத தேயிலை தூளின் மதிப்பு ரூ.1 கோடியே 67 லட்சம் ஆகும். விற்பனை எண் 41–க்கான ஏலம் வருகிற 8, 9 ஆகிய தேதிகளில் நடைபெறுகிறது. ஏலத்துக்கு மொத்தம் 16 லட்சத்து 62 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வருகிறது.

## பாம்பன் மீனவர்கள் வலையில் குறைந்த அளவில் கிடைத்த டியூப் கணவாய் மீன்கள்



ராமேசுவரம் அருகே உள்ள பாம்பன் தெற்குவாடி கடற்கரையில் இருந்து சுமார் 80 விசைப்படகுகளில் 400-க்கும் மேற்பட்ட மீனவர்கள், மன்னார் வளைகுடா கடல் பகுதியில் மீன்பிடிக்க சென்று இருந்தனர். நேற்று காலை மிக குறைந்த அளவு மீன்களுடன் மீனவர்கள் கரை திரும்பினர்.

ஒவ்வொரு படகிலும் சராசரியாக 1 டன் வரை கிடைக்கும் டியூப் கணவாய் மீன் மிக குறைந்த அளவில் தலா ஒரு படகிற்கு 100 கிலோ மட்டுமே கிடைத்திருந்தன. இதுகுறித்து பாம்பன் விசைப்படகு மீனவர் பேட்ரிக் கூறியதாவது:- கடந்த 1 மாதத்திற்கு மேலாக பாம்பன் பகுதியில் மீன் பிடித்து வரும் விசைப்படகு மீனவர்களுக்கு வழக்கத்தை விட குறைந்த அளவே மீன்கள் கிடைக்கின்றன. தட்பவெப்ப நிலை மாற்றத்தால் மீன்கள் வரத்து குறைந்துள்ளது. ஆண்டுதோறும் செப்டம்பர் மாதத்தில் இருந்து அக்டோபர் மாதம் வரை டியூப் கணவாய் மீன்கள் கிடைக்கும். கடந்த மாதம் ஒவ்வொரு படகிலும் 1 டன் வரை டியூப் கணவாய் மீன்கள் கிடைத்தன. ஆனால் தற்போது 50 முதல் 100 கிலோ வரை மட்டுமே இந்த வகை மீன்கள் கிடைக்கின்றன. பாம்பனில் மீனவர்கள் பிடித்து வரும் டியூப் கணவாய் மீன்கள் மொத்தமாக கேரளாவில் உள்ள கம்பெனிகளுக்கு அனுப்பப்பட்டு சுத்தம் செய்து விமானம் மூலமாக சிங்கப்பூர், சீனா, ஹாங்காங் உள்ளிட்ட வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. மார்க்கெட்டில் 1 கிலோ டியூப் கணவாய் மீன் ரூ.110-க்கு விற்பனை செய்யப்படுகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

## டெல்டா மாவட்டத்தில் 2-வது நாளாக பலத்த மழை விவசாயிகள் மகிழ்ச்சி



டெல்டா மாவட்டமான தஞ்சை, நாகை, திருவாரூரில் நேற்று 2-வது நாளாக பலத்த மழை பெய்தது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

தஞ்சை

தமிழகத்தில் தென்மேற்கு பருவமழை கடந்த ஜூன் மாதம் தொடங்கியது. இந்த பருவமழை காலத்தில் ஏற்பட்ட வெப்ப சலனம் காரணமாக சில நாட்களுக்கு பரவலாக மழை பெய்யும் என வானிலை மையம் அறிவித்து இருந்தது. அதன்படி தஞ்சை மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்து வந்தது. இந்த நிலையில் நேற்றுமுன்தினம் மாலை திடீரென கருமேகங்கள் திரண்டு வந்தன. சிறிதுநேரத்தில் மழை பெய்ய ஆரம்பித்தது. இந்த மழை 1 மணி நேரம் நீடித்தது. இந்நிலையில் நேற்று வெயிலின் தாக்கம் அதிகமாக இல்லை. நேற்று முழுவதும் வானம் மேகமூட்டத்துடனே காணப்பட்டது. தொடர்ந்து நேற்று மாலை 6.30 மணியளவில் மீண்டும் மழை பெய்யத் தொடங்கியது. 1 மணி நேரம் பெய்த மழையால் தஞ்சை சாலைகளில் மழை நீர் வெள்ளமாக ஓடியது. ரெயில்வே கீழ்பாலத்தில் மழை நீர் முழுங்கால் அளவுக்கு தேங்கி நின்றது. இதனால் அந்த வழியாக

வாகனங்களில் செல்வோர் சிரமப்பட்டனர். தஞ்சை மாவட்டத்தில் 2-வது நாளாக நேற்று மழை பெய்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.தஞ்சை மாவட்டத்தில் நேற்றுகாலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழைஅளவு மில்லிமீட்டரில் வருமாறு:-

தஞ்சை-7, வல்லம்-10, குருங்குளம்-10, திருவையாறு-5, திருக்காட்டுப்பள்ளி-1.20, ஒரத்தநாடு-10.60, நெய்வாசல்தென்பாதி-11.60, வெட்டிக்காடு-42, பாபநாசம்-12, அய்யம்பேட்டை-46, பட்டுக்கோட்டை-34.50, அதிராம்பட்டினம்-43.80, ஈச்சன்விடுதி-4, மதுக்கூர்-40, பேராவூரணி-11, கும்பகோணம்-15, மஞ்சலாறு-2.40, பூதலூர்-3.20, திருவிடைமருதூர்-32, அணைக்கரை-27.20, கல்லணை-8.60தஞ்சை மாவட்டத்தில் மொத்தம் 377.10 மில்லிமீட்டர் மழை பெய்தது. சராசரி மழைஅளவு 17.96 மில்லிமீட்டர் ஆகும்.

நாகை

நாகையில் கடந்த சில மாதங்களாக கடுமையாக வெயில் அடித்தது. இதனால் பொதுமக்கள் பெரிதும் சிரமப்பட்டு வந்தனர். மேலும், சம்பா சாகுபடி செய்துவந்த விவசாயிகள் விதைத்திருந்த நெல் பயிர்கள் கருகியதால் பெரும் கவலையடைந்தனர். இந்தநிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்பு நாகை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் பரவலாக மழை பெய்தது. இதனால் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் சற்று நிம்ம அடைந்தனர். இதைத்தொடர்ந்து சில தினங்களாக மீண்டும் வழக்கம்போல் வெயில் சுட்டெரித்தது. இந்தநிலையில் நேற்று முன்தினம் மதியம் சுமார் 3 மணிக்கு வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. பின்னர் 4.15 மணிக்கு பலத்த காற்றுடன் கன மழை பெய்தது. இதனால் சாலைகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. இந்த நிலையில் நேற்று காலை முதலே வானம் மேகமூட்டத்துடனும் லேசான வெயிலும் இருந்து வந்தது. இந்த நிலையில் நேற்று மதியம் 3 மணி அளவில் 2-வது நாளாக

பலத்த காற்றுடன் மழை பெய்தது. இதனால் ஆங்காங்கே சாலைகளில் மழைநீர் தேங்கி நின்றது.

திருவாரூர்

திருவாரூரில் நேற்றுமுன்தினம் மாலை மழை தொடங்கியது. நேற்று காலை வானம் கருமேக மூட்டத்துடன் காணப்பட்டது. மதியம் 2 மணிக்கு தொடங்கிய மழை இடைவிடாது மாலை வரை பெய்தது. இதேபோல் மன்னார்குடி, கூத்தாநல்லூர், முத்துப்பேட்டை உள்ளிட்ட மாவட்டத்தின் மற்ற பகுதிகளிலும் நேற்று பரவலாக மழை பெய்தது. மழையினால் பள்ளி மாணவர்கள், தரைக்கடை வியாபாரிகள் சற்று சிரமத்திற்குள்ளாயினர்.

திருவாரூரில் அனைத்து சாலைகளில் மழை நீர் வெள்ளம் போல் கரைபுரண்டு ஓடியது. தாழ்வான பகுதிகளில் தண்ணீர் குளம் போல் தேங்கி நின்றன. சம்பா சாகுபடி நடைபெற்று வரும் நிலையில் தண்ணீர் பிரச்சினையால் விவசாயிகள் அவதிப்பட்டு வந்தனர். தொடர்ந்து மழை பெய்வதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். மேலும் சம்பா சாகுபடி பணிகளிலும் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். வடகிழக்கு பருவ மழை காலம் விரைவில் தொடங்க உள்ளது. இந்த நிலையில் கடந்த 2 நாட்களாக திருவாரூர் மாவட்ட பகுதியில் பரவலாக மழை பெய்து இருப்பது குறிப்பிடத்தக்கது.

மழை அளவு

திருவாரூர் மாவட்டத்தில் நேற்று காலை 8 மணி வரை பெய்த மழை அளவு (மி.மீட்டர்) விவரம் வருமாறு:-

திருவாரூர்-24, குடவாசல்-25, மன்னார்குடி-4, முத்துப்பேட்டை-31, நன்னிலம்-17, நீடாமங்கலம்-14, திருத்துறைப்பூண்டி-37, வலங்கைமான்-

50, பாண்டவயாறு தலைப்பு-10. சராசரியாக மாவட்டத்தில் 24 மில்லி மீட்டர் மழை பதிவாகி உள்ளது.

## வைகை அணையில் ரூ.27 லட்சம் செலவில் வண்ணமீன்கள் அருங்காட்சியகம்



ஆண்டிப்பட்டி,

வைகை அணை பூங்கா பகுதியில் ரூ.27 லட்சம் செலவில் புதிதாக வண்ண மீன்கள் அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த அருங்காட்சியகத்தில் உள்ள வண்ண மீன்களை சுற்றுலா பயணிகள் மகிழ்ச்சியுடன் பார்வையிட்டனர்.

வண்ணமீன் அருங்காட்சியகம்

தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி அருகே வைகை அணை அமைந்துள்ளது. வைகை அணையின் முன்பாக அமைந்துள்ள பூங்கா பகுதிகளில் பொழுதுபோக்கு அம்சங்கள் அமைக்கப்பட்டுள்ளது. வைகை

அணைக்கு ஒவ்வொரு விடுமுறை நாட்களின் போதும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்றனர். அதிகமான சுற்றுலா பயணிகள் வரும் வைகை அணை பூங்காவை மேம்படுத்த சுற்றுலா வளர்ச்சித்துறை சார்பில் பல்வேறு பணிகள் நடைபெற்று வருகிறது.அதன்படி படகுகுழாம், செயற்கை நீரூற்று, புல்வெளிகள், வண்ணவிளக்குகள் சிறுவர்கள் விளையாட்டு உபகரணங்கள் உள்ளிட்டவை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. அதில் வைகை அணை வலது கரை பூங்கா பகுதியில் சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் வண்ணமீன்கள் அருங்காட்சியகம் தொடங்கப்பட்டுள்ளது.

ரூ.27 லட்சம்

இதுகுறித்து வைகை அணை பொதுப்பணித்துறை அதிகாரிகளிடம் கேட்ட போது, அவர்கள் கூறியதாவது:–வைகை அணைக்கு வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் வகையில் பல்வேறு வசதிகளை ஏற்படுத்தி வருகிறோம். அதில் தற்போது வண்ணமீன்கள் அருங்காட்சியகம் ரூ.27 லட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த அருங்காட்சியகத்தில் 11 பெரிய தொட்டிகளில் 11 வகையான வண்ணமீன்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது. மீன்கள் ஒவ்வொன்றும் புதுமையாகவும், அழகாகவும் இருப்பதால், இது சுற்றுலா பயணிகளை கவரும். அருங்காட்சியகத்தை பார்வையிட தனியாக கட்டணம் எதுவும் செலுத்த தேவையில்லை. விடுமுறை நாட்களிலும், சுற்றுலா பயணிகள் அதிகம் வரும் நாட்களிலும் இந்த வண்ணமீன்கள் அருங்காட்சியகம் பார்வையாளர்களுக்காக திறந்து விடப்படும். இவ்வாறு அவர்கள் கூறினார்.

## நெல்லையும் கொள்முதல் செய்ய வேண்டும் அரசுக்கு, விவசாய சங்கம் கோரிக்கை




20 சதவீதம் ஈரப்பதம் உள்ள நெல்லையும் கொள்முதல் செய்ய வேண்டும் என அரசுக்கு, விவசாய சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.இதுதொடர்பாக தமிழக விவசாய சங்க திருவாரூர் மாவட்ட தலைவர் மேகன்தாஸ் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்.அப்போது அவர் கூறியதாவது:-

கொள்முதல் செய்ய வேண்டும்

பல்வேறு இயற்கை இடர்பாடுகள் மற்றும் மின்சார பற்றாக்குறை இருந்த போதிலும் விவசாயிகள் தங்களது நிலங்களில் சாகுபடி பணிகளை பம்பு செட் மூலம் தொடர்ந்து செய்து வருகின்றனர். டெல்டா மாவட்டத்தில் 45 ஆயிரம் எக்டேர் குறுவை சாகுபடி பம்பு செட் மூலம் செய்யப்பட்டது. இதில் 30 ஆயிரம் எக்டேர் அறுவடை செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள 15 ஆயிரம் எக்டேர் நெல் அறுவடை செய்யப்பட்டு பல்வேறு ஊர்களில் உள்ள அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்யப்படாமல் கொட்டிக்கிடக்கிறது. அரசு நிர்ணயித்த 17 சதவீத ஈரப்பதம் கொள்முதல் செய்யப்படவில்லை. மழை தொடர்ந்து பெய்வதால் நெல்லின் ஈரப்பதம் அதிகரித்துள்ளது. அறுவடை

செய்யப்பட்ட நெல்லை 20 சதவீதம் ஈரப்பதம் பார்த்து கொள்முதல் செய்தால் தான் விவசாயிகள் ஓரளவுற்கு நஷ்டமின்றி நெல்லை விற்பனை செய்ய முடியும்.குறிப்பாக நீடாமங்கலம் ஒன்றியம் முழுவதும் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் லாரிகள் ஸ்டிரைக்கினால் தனியார் வியாபாரிகளுக்கு வாய்ப்பில்லை. இந்த சூழ்நிலையில் அரசே அனைத்து நெல்லையும் கொள்முதல் செய்ய வேண்டும். 20 சதவீதம் ஈரப்பதம் உள்ள நெல்லையும் கொள்முதல் செய்ய வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

## திருவாரூர் மாவட்டத்தில் 2-வதுநாளாக மழை விவசாயிகள் மகிழ்ச்சி



திருவாரூர் மாவட்டத்தில் 2-வது நாளாக மழை பெய்து வருகிறது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். சாலைகளில் வெள்ளம்

தமிழகத்தில் தென்மேற்கு பருவமழை கடந்த ஜூன் மாதம் தொடங்கியது. இந்த பருவமழை காலத்தில் ஏற்பட்ட வெப்ப சலனம் காரணமாக சில நாட்களுக்கு பரவலாக மழை பெய்யும் என வானிலை மையம் அறிவித்து இருந்தது. அதன்படி நேற்றுமுன்தினம் மாலை மழை தொடங்கியது. நேற்று காலை வானம் கருமேக மூட்டத்துடன் காணப்பட்டது. மதியம் 2 மணிக்கு தொடங்கிய மழை இடைவிடாது மாலை வரை பெய்தது. இதேபோல் மன்னார்குடி, கூத்தாநல்லூர், முத்துப்பேட்டை உள்ளிட்ட மாவட்டத்தின் மற்ற பகுதிகளிலும் நேற்று பரவலாக மழை பெய்தது. மழையினால் பள்ளி மாணவர்கள், தரைக்கடை வியாபாரிகள் சற்று சிரமத்திற்குள்ளாயினர். திருவாரூரில் அனைத்து சாலைகளில் மழை நீர் வெள்ளம் போல் கரைபுரண்டு ஓடியது. தாழ்வான பகுதிகளில் தண்ணீர் குளம் போல் தேங்கி நின்றன. சம்பா சாகுபடி நடைபெற்று வரும் நிலையில் தண்ணீர் பிரச்சினையால் விவசாயிகள் அவதிப்பட்டு வந்தனர். தொடர்ந்து மழை பெய்வதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். மேலும் சம்பா சாகுபடி பணிகளிலும் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். வடகிழக்கு பருவ மழை காலம் விரைவில் தொடங்க உள்ளது. இந்த நிலையில் கடந்த 2 நாட்களாக திருவாரூர் மாவட்ட பகுதியில் பரவலாக மழை பெய்து இருப்பது குறிப்பிடத்தக்கது.

மழை அளவு

திருவாரூர் மாவட்டத்தில் நேற்று காலை 8 மணி வரை பெய்த மழை அளவு (மி.மீட்டர்) விவரம் வருமாறு:-

திருவாரூர்-24, குடவாசல்-25, மன்னார்குடி-4, முத்துப்பேட்டை-31, நன்னிலம்-17, நீடாமங்கலம்-14, திருத்துறைப்பூண்டி-37, வலங்கைமான்-

50, பாண்டவயாறு தலைப்பு-10. சராசரியாக மாவட்டத்தில் 24 மில்லி மீட்டர் மழை பதிவாகி உள்ளது.

### மணப்பாறை பகுதியில் வறட்சியை சமாளித்து வளரும் அயிலாந்தஸ் மரம் வாங்க ஆர்வம் காட்டும் விவசாயிகள்



மணப்பாறை பகுதியில் வறட்சியை சமாளித்து வளரும் அயிலாந்தஸ் மரம் வாங்க விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். தமிழ்நாடு வனத்துறை சார்பில் இலவசமாக வழங்கப்படும் இந்த மரத்திற்கு மானியமும் வழங்கப்படுகிறது.

<u>பசுமை தமிழகம்</u>

திருச்சி மாவட்டம், மணப்பாறையில் உள்ள வனத்துறை அலுவலகத்தில் தமிழ்நாடு பசுமை பாதுகாப்பு மற்றும் பல்லுயிர் பெருக்கம் என்ற திட்டத்தின் கீழ் பசுமை நிறைந்த தமிழகத்தை உருவாக்கிட வேண்டும். அதன் மூலம் மழை பெய்திட வைக்க வேண்டும் என வலியுறுத்தி, இந்த திட்டத்தின் மூலம் விவசாயிகளுக்கு மரக்கன்றுகள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றது.

தேக்கு, வேம்பு, புங்கன், அயிலாந்தஸ் உள்ளிட்ட பல்வேறு மரக்கன்றுகள் வழங்கப்பட்டு வரும் நிலையில் அயிலாந்தஸ் மரத்தைத்தான் விவசாயிகள் அதிகம் வாங்கிச் செல்கிறார்கள். மரக்கன்றுகள் வாங்க வந்ததுமே முதலில் அயிலாந்தஸ் மரத்தை தான் தேர்வு செய்கின்றனர். இதற்கு காரணம் அயிலாந்தஸ் மரம் வறட்சியை சமாளித்து வளரக்கூடிய மரம். தற்போது மழை காலத்தில் இந்த மரத்தை வைத்து விட்டு முறையாக பராமரித்தால் போதும் குறைந்த நீரில் நல்ல முறையில் வளர்ந்து விடுகின்றது.

<u>ஊடுபயிர்</u>

இது மட்டுமின்றி சுமார் 7 வருடங்களில் இந்த மரத்தை அறுவடை செய்து விடுவதோடு ஒவ்வொரு மரத்திற்கும் இடைப்பட்ட காலி விளைநிலங்களில் ஊடுபயிர் செய்து அதன் மூலமும் வருமானம் ஈட்டலாம். இந்த மரத்தை முறையாக பராமரித்தால் ஒரு மரத்திற்கு 5 ரூபாய் மானியம் வழங்குகின்றது. தீக்குச்சி, தீப்பெட்டி ஆகியவை தயாரிக்கத் தான் இந்த மரங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

ஒரு ஏக்கருக்கு 200 மரக்கன்றுகள் மட்டுமே நட வேண்டும். மேலும் மரக்கன்றுகளை வாங்குவதற்கு வனத்துறையினர் வைத்துள்ள விண்ணப்பத்தை முறையாக பூர்த்தி செய்து அவற்றை ஆய்வு செய்த பின்னரே விவசாயிகளுக்கு மரக்கன்று வழங்கப்படுகின்றது. இதற்காக வாகனங்களில் விவசாயிகள் வந்து நூற்றுக்கணக்கான மரக்கன்றுகளை வாங்கிச் செல்கின்றனர்.

## விவசாயிகளுக்கு ஊழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் உதவித்தொகை: கலெக்டர் லட்சுமி வழங்கினார்



விழுப்புரம்,

விவசாயிகளுக்கு உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் கல்வி உதவித்தொகையை கலெக்டர் லட்சுமி வழங்கினார்.

குறைகேட்பு கூட்டம்

விழுப்புரம் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நேற்று வாராந்திர மக்கள் குறைகேட்பு கூட்டம் நடந்தது. இதற்கு கலெக்டர் லட்சுமி தலைமை தாங்கி, பொதுமக்களிடம் இருந்து மனுக்களை பெற்றார். கூட்டத்தில் ஓய்வூதியம், கல்விக்கடன், வீட்டுமனைப்பட்டா, பசுமை வீடுகள், திருமண உதவித்தொகை, திருமண உதவித் தொகை என்று 418 மனுக்களை பெறப்பட்டது. இதை சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அனுப்பி உரிய நடவடிக்கை எடுக்கும்படி அவர் உத்தரவிட்டார்.

உதவித்தொகை

கூட்டத்தில் முதல்–அமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் கல்வி உதவித்தொகையாக விவசாயி சேகருக்கு ரூ.2 ஆயிரத்து 750–க்கான காசோலையையும், ரங்கசாமிக்கு ரூ.4,250–க்கான காசோலையும்,

முத்துலிங்கம் என்பவருக்கு ரூ.2,250–க்கான காசோலையையும் கலெக்டர் லட்சுமி வழங்கினார்.

இதில் மாவட்ட வருவாய் அலுவலர் பிருந்தாதேவி, உதவி கலெக்டர்(பயிற்சி) ஜெயசீலன், தனித்துணை கலெக்டர்(சிறப்பு அமலாக்கதிட்டம்) இருதயமேரி, மாவட்ட தட்கோ மேலாளர் ரவிச்சந்திரன், மாவட்ட ஊராட்சி செயலாளர் இந்திரா, ஊரக வளர்ச்சி முகமை உதவி ஆணையர்(கலால்) முகுந்தன், தனித்துணை கலெக்டர் காமராஜ் மற்றும் அனைத்துத் துறை அலுவலர்கள், தாசில்தார்கள் உள்பட பலர்கலந்து கொண்டனர்.

## கல்வராயன் மலை பகுதியில் கனமழை : கோமுகி அணையில் இருந்து 400 கனஅடி உபரி நீர் வெளியேற்றம்



கச்சிராயப்பாளையம்,

கல்வராயன்மலை பகுதியில் பெய்யும் கனமழை காரணமாக, கோமுகி அணையில் இருந்து 400 கனஅடி உபரி நீர் வெளியேற்றப்பட்டு

வருகிறது. தொடர்ந்து மழை பெய்வதால் கரையோர பகுதி கிராமங்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

<u>கனமழை</u>

விழுப்புரம் மாவட்டத்தில் கள்ளக்குறிச்சி அருகே கல்வராயன்மலை அடிவாரத்தில் உள்ளது கோமுகி அணை. 46 அடி கொள்ளளவு கொண்ட அணையில், பாதுகாப்பு கருதி 44 அடி வரையில் மட்டுமே தண்ணீர் தேக்கி வைக்கப்படும். இந்நிலையில், கடந்த சில தினங்களாக அணையின் நீர் பிடிப்பு பகுதியான கல்வராயன் மலை பகுதியில் கனமழை பெய்து வருகிறது.

<u>500 கனஅடியாக உயர்வு</u>

இதனால் கல்படை, பொட்டியம் ஆகிய ஆறுகள் வழியாக அணைக்கு தண்ணீர் வரத்து அதிகரித்து வருகிறது. நேற்று முன்தினம் 44 அடியை எட்டிய நிலையில், அணைக்கு 200 கன அடி அளவில் தண்ணீர் வரத்து இருந்தது. இதன்காரணமாக அணையில் இருந்த கோமுகி ஆற்றில் 100 கனஅடி நீர் உபரி நீராக பழைய பாசன வாய்க்கால் வழியாக கோமுகி ஆற்றில் வெளியேற்றப்பட்டது.

இந்த சூழ்நிலையில் நேற்று மாலை மலைப்பகுதியில் மீண்டும் கனமழை பெய்தது. இதனால் அணைக்கு தண்ணீர் வரத்து 500 கனஅடியாக உயர்ந்தது. இதையடுத்து பொதுப்பணித்துறை அதிகாரிகள் அணையின் பாதுகாப்பு கருதி உபரி நீராக 400 கன அடி நீரை கோமுகி ஆற்றில் வெளியேற்றினர்.

<u>வெள்ள அபாய எச்சரிக்கை</u>

மலைபகுதியில் தொடர்ந்து மழை பொழிவு இருந்துவருவதால் பொதுப்பணித்துறை அதிகாரிகள் அணையை தீவிரமாக கண்காணித்து வருகின்றனர். அணையில் இருந்து எப்போது வேண்டுமானாலும் கூடுதல் நீர் திறக்கப்படும் என்பதால், கோமுகி ஆற்றின் கரையோர பகுதியில் உள்ள கிராமங்களுக்கு தண்டோரா மூலம் வெள்ள அபாய எச்சரிக்கை

**விடப்பட்டுள்ளது. அணை முழு கொள்ளவை எட்டியிருப்பது பாசன விவசாயிகளிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது.**

தினகரன்

**அனுமதிக்கப்பட்ட அளவை விட காய்கறிகளில் நச்சுப்பொருள் அதிகரிப்பு**

புதுடெல்லி: அன்றாட உணவில் காய்கறிகள், கீரைகள், பழங்களுக்கு முக்கிய பங்கு உண்டு. உடலுக்கு தேவையான வைட்டமின்கள், நார்ச்சத்து உள்ளிட்டவை இவைகள் மூலமாகத்தான் கிடைக்கின்றன. மேலும், பல்வேறு நோய்களை தடுக்கும் மருந்தாகவும் பச்சைக் காய்கறிகள், கீரைகள் பரிந்துரைக்கப்படுகின்றன. ஆனால் தற்போது இந்த கீரைகள், காய்கறிகள் மற்றும் பழங்களிலேயே, உடலுக்கு கேடு விளைவிக்கும் ரசாயன நச்சுப்பொருட்கள் கலந்துள்ளது என்ற அதிர்ச்சி தகவல் தெரியவந்துள்ளது. விதைகளை பதப்படுத்துவது தொடங்கி விளைந்து விற்பனைக்கு வரும் வரை ரசாயனமே பிரதானமாக உள்ளது.

கடந்த 7 ஆண்டுகளை காட்டிலும், காய்கறிகள், பழங்கள், இறைச்சி, மற்றும் நறுமணப்பொருட்களில் அனுமதிக்கப்பட்ட அளவை விட நச்சுப்பொருட்களின் அளவு தற்போது 2 மடங்கு அதிகரித்துள்ளதாக

வேளாண்துறை தகவல் வெளியிட்டுள்ளது. கடந்த 2008-09ம் ஆண்டு உணவு பொருட்களில் இருந்த ரசாயன நச்சுப்பொருட்ளின் அளவு 1.4 சதவீதமாக இருந்தது. இது 2014-15ம் ஆண்டில் 2.6 சதவீதமாக உயர்ந்துள்ளது. காய்கறிகளில் 56 சதவீதம் மட்டுமே அனுமதிக்கப்பட்ட அளவில் உள்ளது. முக்கியமாக பச்சை மிளகாய், காலிபிளவர், முட்டைகோஸ், கத்தரிக்காய், தக்காளி, குடைமிளகாய், கொத்தமல்லி உள்ளிட்டவற்றில் நச்சுப்பொருட்கள் அதிகளவு கலந்துள்ளது தெரியவந்துள்ளது. இதில், டெல்லியில் நச்சுப்பொருட்களின் அளவு அபாயக் கட்டத்தில் உள்ளது. சுமார் 41 மாதிரிகளை ஆய்வுக்கு உட்படுத்தியதில் அனுமதித்த அளவை விட அதிக அளவில் நச்சுப்பொருட்கள் இருப்பது தெரியவந்தது. இவற்றில் 31 மாதிரிகள் காய்கறிகளாகும்.

டெல்லியில் கிடைக்கப்பெறும் பெரும்பாலான காய்கறிகள் யமுனா ஆற்றிற்கு அருகில் உள்ள பகுதிகளில் விளைவிக்கப்பட்டவை ஆகும். இதேபோல் குர்கானில் 24 மாதிரிகளில் நச்சுப்பொருட்கள் இருப்பது கண்டறியப்பட்டது. இவற்றில் 11 மாதிரிகள் காய்கறிகளாகும். மும்பையில் 38 மாதிரிகளில் 25லிலும், ஐதராபாத்தில் 51 மாதிரிகளில் 27லிலும், ஜெய்ப்பூரில் 10 மாதிரிகளில் 7லிலும் நச்சுப்பொருட்கள் இருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

**இந்தியாவில் மேற்கொள்ளப்படும் சூரிய மின்திட்டத்தில் ஜெர்மனி ரூ.7,300 கோடி முதலீடு: ஏஞ்சலா மெர்க்கல் அறிவிப்பு**




புதுடெல்லி: இந்தியாவில் மேற்கொள்ளப்படும் சூரிய மின்திட்டத்தில் ரூ.7,300 கோடியை முதலீடு செய்ய ஜெர்மனி ஒப்புக் கொண்டுள்ளதாக பிரதமர் மோடி தெரிவித்தார். ஜெர்மன் பிரதமர் ஏஞ்சலா மெர்க்கல், 3 நாள் பயணமாக டெல்லி வந்துள்ளார். நேற்று காலை அவர், காந்தி சமாதியில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். ராஷ்டிரபதி பவனில் நேற்று காலை அவருக்கு, அரசு முறைப்படி வரவேற்பு அளிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து, ஜெர்மன் பிரதமர் ஏஞ்சலா மெர்க்கல் தலைமையில் அந்நாட்டுக் குழுவினரும், பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் இந்திய குழுவினரும் பேச்சுவார்த்தை நடத்தினர். ராணுவம், பாதுகாப்பு, கல்வி, புத்தாக்க எரிசக்தி, பொருளாதார உறவுகள், முதலீடுகள் ஆகியவை குறித்து இரு தரப்பினரும் ஆலோசித்தனர்.

அதைத் தொடர்ந்து இரு தலைவர்களும் கூட்டாக பேட்டி அளித்தனர். அப்போது பிரதமர் நரேந்திர மோடி கூறுகையில், ‘‘இந்தியாவில் சூரிய மின்திட்டங்களில் ரூ.7,300 கோடியை முதலீடு செய்ய ஜெர்மன் பிரதமர்

உறுதி அளித்துள்ளார். இரு நாடுகளும் பல்வேறு துறைகளில் இணைந்து செயலாற்ற ஒப்புக்கொண்டுள்ளது'' என்றார்.ஜெர்மன் பிரதமர் ஏஞ்சலா மெர்க்கல் பேசுகையில், ''இந்தியாவில் ஜெர்மன் நிறுவனங்கள் எளிதாக தொழில் தொடங்க வகை செய்யும் வகையில் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தியாவின் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு மொழி ஜெர்மனை அங்கீகரிக்கவும், அதேபோல், இந்தியாவின் செழுமையான மொழிகளை, ஜெர்மனியில் அங்கீகரிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது'' என்றார்.

18 ஒப்பந்தங்கள் கையெழுத்து

பிரதமர் நரேந்திர மோடி, ஜெர்மன் பிரதமர் ஏஞ்சலா மெர்க்கல் ஆகியோர் தலைமையில் நடந்த இந்தியா - ஜெர்மன் உயர்நிலைக்குழு கூட்டத்தில், 18 ஒப்பந்தங்கள் கையெழுத்தானது. இதில் உயர்க்கல்வி, விமானப் போக்குவரத்து, ரயில்வே மற்றும் உணவு பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு துறை ஒப்பந்தங்கள் அடங்கும். இதன் மூலம் இரு தரப்புக்கும் பயன் ஏற்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**டெல்டா மாவட்டங்களில் மழை: மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறப்பு குறைப்பு**



மேட்டூர்: காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் மழை குறைந்ததாலும், கர்நாடக அணைகளில் இருந்து திறக்கப்படும் நீரின் அளவு குறைக்கப்பட்டுள்ளதாலும், மேட்டூர் அணைக்கு நேற்று முன்தினம் வினாடிக்கு 7,685 கனஅடியாக இருந்த நீர்வரத்து, நேற்று வினாடிக்கு 7,610 கனஅடியாக சரிந்தது. டெல்டா மாவட்டங்களில் மழை பெய்து வருவதால், பாசனத்திற்கு தண்ணீர் தேவை குறைந்துள்ளதையடுத்து, நேற்று நண்பகல் முதல் மேட்டூர் அணையில் இருந்து திறக்கப்படும் தண்ணீரின் அளவு, 12 ஆயிரம் கனஅடியில் இருந்து 10 ஆயிரம் கனஅடியாக குறைக்கப்பட்டுள்ளது. அதே போல், கிழக்கு மற்றும் மேற்கு கால்வாய் பாசனத்திற்கு தண்ணீர் திறப்பும் 800 கனஅடியில் இருந்து வினாடிக்கு 600 கனஅடியாக குறைக்கப்பட்டுள்ளது. அணைக்கு வரத்தை விட, திறப்பு அதிகமாக உள்ளதால் நேற்று முன்தினம் 69.69 அடியாக இருந்த நீர்மட்டம் நேற்று 69.15 அடியாக சரிந்தது. அணையின் நீர் இருப்பு 31.97 டிஎம்சி.

**விண்வெளியில் நடக்கிறது விவசாயம்: பூமிக்கு தேவையான காய்கறிகள் இனி ராக்கெட் மூலம் வரக்கூடும்**



‘‘காய்கறிகள், கீரைகள், முள்ளங்கி ஆகியவற்றை வளர்க்கும் முயற்சி நடக்கிறது’’

நியூயார்க்: விண்வெளியில் காய்கறிகளை விளைவிக்கும் திட்டத்தை, அமெரிக்காவின் விண்வெளி ஆராய்ச்சி மையமான நாசா, சத்தமில்லாமல் செயல்படுத்தி வருகிறது. ஹாலிவுட்டில் பல கோடி ரூபாய் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு, சமீபத்தில் ரிலீசான திரைப்படம் ‘மார்ஷியன்’. இதில் செவ்வாய்கிரகத்தில் தனித்து விடப்படும் மேட் டாமன், தான் உயிர் வாழ்வதற்காக அங்கேயே காய்கறிகளை பயிரிடும் முயற்சியை மேற்ெ◌காள்வார்.
ஆனால், இந்த நடவடிக்கையை ஏற்கனவே, அமெரிக்காவின் விண்வெளி ஆராய்ச்சி மையம் நாசா, செய்துள்ளது இப்போது தெரியவந்துள்ளது. அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளின் கூட்டு முயற்சியில், சர்வதேச விண்வெளி மையம் அமைக்கப்பட்டுள்ளது.

விண்வெளியில் சுற்றி வரும் இதில், சாலட் எனப்படும், பிரெட்டில் வைத்து சாப்பிடக்கூடிய காய்கறிகளை பயிரிடும் முயற்சி நடந்து, அது வெற்றியும் பெற்றுள்ளது. கடந்த ஆகஸ்ட் மாதம் சர்வதேச விண்வெளி மையத்துக்கு சென்ற 6 விண்வெளி வீரர்கள், மையத்தில் விளைவிக்கப்பட்ட சிவப்பு கீரை வகையைச் சாப்பிட்ட பெருமையை பெற்றுள்ளனர். அமெரிக்காவின் உதா மாகாண பல்கலைக்கழக வேளாண் பேராசிரியர் புரூஸ் பக்பீ மூலம் இத்திட்டத்தை நாசா செயல்படுத்தி உள்ளது.

இதுகுறித்து பக்பீ இணையதளம் ஒன்றில் வெளியிட்டுள்ள செய்தியில், ‘‘சர்வதேச விண்வெளி மையத்தில், சாலட் காய்கறிகள், சில எளிமையான

கீரைகள், முள்ளங்கி ஆகியவற்றை வளர்க்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம். பயன்படுத்தப்பட்ட தண்ணீரை இதற்கு உபயோகிக்கலாம். பூமியில் விண்வெளி போன்ற ஆய்வுக்கூடத்தில் இதை வளர்த்த பார்த்த பின்னர், 'வெஜ்-01' என்ற பெயரில் விண்வெளியில் அது பயிரிடப்பட்டது. 33 நாட்கள் வளர்த்த பின்னர் அது பூமிக்கு கொண்டு வரப்பட்டது. 2014 அக்டோபரில் முதல் முறையாக விண்வெளியில் விளைந்த பயிரை அறுவடை செய்தோம்'' என்று கூறியுள்ளார். வருங்காலத்தில், செவ்வாய் கிரக கேரட் மா.... சும்மா.... சாம்பார் மணமணக்கும் என்று கோயம்பேட்டில் கூவிகூவி விற்கும் நிலை வரலாம்.

**நெய், வெண்ணெய் இறக்குமதி வரி அதிகரிப்பு**




புதுடெல்லி: சர்வதேச சந்தையில் பால் பொருள் விலை குறைவால் உள்நாட்டில் பாதிப்பு ஏற்படுவதை தடுக்க நெய், வெண்ணெய் பொருட்களுக்கு இறக்குமதி வரியை 10 சதவீதம் முதல் 40 வரை மத்திய அரசு உயர்த்தியுள்ளது. இந்த வரி உயர்வு அடுத்த ஆண்டு மார்ச் வரை ஆறு மாதங்களுக்கு அமலில் இருக்கும் என்று மத்திய வருவாய் துறை செயலாளர் ஹஸ்முக் ஆதியா கூறியுள்ளார்.

தி இந்து
தமிழால் இணைவோம்

## தேசிய வன விலங்குகள் வார விழா_: தமிழகத்தில் அரிதாக இருக்கும் சாம்பல் நிற அணில்கள்



சாம்பல் நிற அணில்

தமிழகத்தில் மேற்குத் தொடர்ச்சி மலை வனப்பகுதியில், ஒரே நேரத்தில் இரண்டு கூடுகளைக் கட்டி வசிக்கும் சாம்பல் நிற அணில்கள் அரிதாகக் காணப்படுகின்றன.

சாதாரண அணில்கள் மரங்கள், வீடுகளின் இடுக்குகளில் கூடு கட்டி வசிக்கும். சாம்பல்நிற அணில்கள் விசித்திரமானவை. உலகில் உள்ள சாம்பல் நிற அணில்களில், 75 சதவீதம் மேற்குத் தொடர்ச்சி மலையில்தான் உள்ளன. இவற்றில் பாதிக்கும் மேல், தமிழகத்தின் சில இடங்களில் மட்டும் உள்ளதாகக் கூறப்படுகிறது. மற்ற இடங்களில் அரிதாகவே காணப்படுகின்றன. இந்த சாம்பல் நிற அணில்கள், கர்நாடக மாநிலம் காவிரி வன உயிரினச் சரணாலயத்திலும், விருது நகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூர் வனப்பகுதியிலும் மட்டுமே இருப்ப தாக ஆரம்பத்தில் கூறப்பட்டது.

இதையடுத்து, ஸ்ரீவில்லிபுத்தூர் வனப்பகுதியில் இந்த அணில் களை பாதுகாக்க, 1988-ம் ஆண்டு வன உயிரின சரணாலயம் தொடங் கப்பட்டது. இதன் மூலம், தற்போது அங்கு சாம்பல் நிற அணில்களும், அதன் வாழ்விடங்களும் அழிவது தடுக்கப்பட்டுள்ளது. தற்போது கொடைக்கானல், திண்டுக்கல், ஓசூர், அமராவதி மற்றும் மேகமலை வனப்பகுதியில் இந்த சாம்பல் நிற அணில்கள் வசிப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

இதுகுறித்து கொடைக்கானல் மாவட்ட வன அலுவலர் டி.வெங் கடேஷ் 'தி இந்து'விடம் கூறிய தாவது: சாம்பல் நிற அணில்கள், மிகவும் அடர்த்தியான வனப்பகுதி யில் மட்டுமே வசிப்பவை. ஆற்றுப் படுகையை ஒட்டியுள்ள பெரிய, உயரமான மரங்களில் இந்த அணில்கள் வாழ்கின்றன. பழங் கள், விதைகள், பூச்சிகள், பறவை களின் முட்டைகள் மற்றும் சில குறிப்பிட்ட மரங்களின் பட்டைகளை உண்ணுகின்றன.

இந்த அணிலின் வால் சாம்பல் நிறத்தில் இருப்பதாலோ, என்னவோ இதற்கு சாம்பல் நிற அணில்கள் எனப் பெயர் வந்துள்ளது. வாலின் நுனிப் பகுதி வெண்மை நிறத்தில் காணப்படும். கோம்ரீட்டா எனும் கொடியைச் சார்ந்த பழங்களை இந்த அணில்கள் விரும்பிச் சாப்பிடும். அதனால், கோம்ரீட்டா கொடி இருந்தால் அந்த பகுதியில் இந்த அணிகள் இருப்பதை உறுதி செய்யலாம். பொதுவாக, இந்த அணில்கள் தனித்தே காணப்படும். சில நேரங்களில் துணையுடன் காணப்படும். பகலில் அனைத்து வேலைகளையும் செய்யும். இரவில் கூடுகளிலோ அல்லது மரக்கிளைகளிலோ உறங்கும்.

**இரண்டு கூடுகள்**

ஒவ்வொரு அணிலும் இரண்டு கூடுகளைக் கட்டுவது வியப்புக் குரிய விஷயமாகும். ஒரு கூடு பழுதடைந்தால், மற்றொரு கூட்டில் வசிக்கத் தொடங்கும். முதலில் கட்டும் கூட்டுக்கு 'நெஸ்ட்' என்றும், மற்றொரு கூடு

‘டிரே’ என்றும் அழைக்கப்படுகிறது. பொதுவாக காடுகளில் உள்ள ஆலமரம், புளிய மரம், மா மரங்களில் வசிக்கும்.

அதிகபட்சமாக 8 ஆண்டுகள் வரை உயிர் வாழும். ஆண்டுக்கு ஒரு குட்டியை மட்டுமே ஈனும். புலிகளைப் போலவே, இந்த அணில் களும் தனக்கென்று, எல்லையை வகுத்துக் கொண்டு வாழும். எனவே, இந்த அணில்கள் வசித்து வரும் வாழ்விடங்களை பாதுகாத் தால்தான், அவற்றை அழிவில் இருந்து காப்பாற்ற முடியும். ஆற்றங்கரைகளில் உயரமான மரங்களை வளர்த்தால், இந்த அணில்களை பாதுகாக்க முடியும் என்று அவர் கூறினார்.

## வட மாவட்டங்களில் மழை தொடரும்_: சென்னையில் இடியுடன் மழை பெய்ய வாய்ப்பு_ - வானிலை ஆய்வு

தமிழகத்தின் வட மாவட்டங்களில் மழை தொடரும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வெப்பச் சலனம் காரணமாக தமிழகம் மற்றும் புதுச்சேரியில் கடந்த சில நாட்களாக பெரும்பாலான இடங்களில் மழை பெய்து வருகிறது. சென்னை, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திருவள்ளூர், புதுக்கோட்டை, கிருஷ்ணகிரி, மதுரை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் நேற்று முன்தினம் இரவு பரவலாக மழை பெய்தது.

இதனால் வெயிலின் தாக்கம் வெகுவாக குறைந்துள்ளது. நேற்று காலை 8.30 மணி நிலவரப்படி அதிகபட்சமாக காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூரில் 10 செ.மீ., காட்டுப்பாக்கத்தில் 8 செ.மீ., திருவண்ணாமலை மாவட்டம் ஆரணியில் 8 செ.மீ., புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி, ஆலங்குடி மற்றும் திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசியில் தலா 7 செ.மீ. மழை பதிவாகியுள்ளது.

வெப்பச் சலனம் காரணமாக வட தமிழகத்தின் பெரும்பாலான இடங்கள் மற்றும் தென் தமிழகத் தில் ஒரு சில இடங்களிலும் பரவலான மழை

பெய்ய வாய்ப்புள்ளது. சென்னையில் வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். ஒரு சில இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யலாம் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேலும் வடகிழக்கு பருவமழை வரும் 15-ம் தேதி முதல் தொடங்குவதற்கு வாய்ப்பு இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

**அரிய மூலிகை செடிகளை பாதுகாக்க_ உலகின் மிக உயர்ந்த லடாக் பகுதியில் ஆய்வு மையம் அமைத்தது டிஆர்டிஓ**




மருத்துவ குணங்கள் மிகுந்த செடிகளைப் பாதுகாக்க, உலகின் மிக உயர்ந்த லடாக் பனிப் பிரதேசத்தில் ராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு கழகம் ஆய்வு மையம் ஒன்றை அமைத்துள்ளது.

காஷ்மீரின் லடாக் பகுதியில் பென்காங் என்ற ஏரி உள்ளது. இதன் அருகில் உள்ள சங்லா என்ற இடத்தில் ராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு கழகம் (டிஆர்டிஓ), தனது ஆய்வு மையத்தை தொடங்கி உள்ளது. இந்த மையம் உலகிலேயே மிக உயர்ந்த பனிப்பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ளது. கடல் மட்டத்தில் இருந்து 17,600 அடி உயரத்தில் இந்த மையம் அமைக்கப்பட்டுள்ளது.

மருத்துவ குணங்கள் மிகுந்த மூலிகைச் செடிகள், அரிய மற்றும் அருகி வரும் செடிகள், இந்த மையத்தில் பாதுகாக்கப்படும். இந்த மையத்தை டிஆர்டிஓ டைரக்டர் ஜெனரல் டாக்டர் எஸ்.கிறிஸ்டோபர் திறந்து

வைத்தார். இதுகுறித்து ராணுவ வட்டாரங்கள் கூறுகையில், ‘‘மிக உயர்ந்த பனிப் பிரதேசங்களில் காவல் காக்கும் ராணுவ வீரர்களுக்குத் தேவையான வேளாண் பொருட் கள், மூலிகை மருந்துகள், உணவுப் பொருட்கள், ஆடைகள் தயாரிக்க வும், இதுகுறித்த ஆய்வுகளில் ஈடு படவும் இந்த மையம் பயன்படும்’’ என்று தெரிவித்துள்ளன.

மாலை மலர்
www.maalaimalar.com
News.Entertainment.Unlimited...

## வைகை அணையில் வண்ண மீன்கள் அருங்காட்சியகம்



ஆண்டிபட்டி, அக்.6–

தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டி அருகே 8 கிலோ மீட்டர் தூரத்தில் வைகை அணை உள்ளது. இங்கு சுற்றுலா துறையின் மூலம் படகு குழாம், நவீன புற்கள் தளம் மற்றும் சிற்பங்கள் என சுற்றுலா பயணிகளை கண்டுகளிக்கும் வகையில் வசதிகள் செய்யப்பட்டு உள்ளது.

தற்போது விலங்குகள் பூங்கா பகுதியில் ரூ. 27 லட்சம் மதிப்பில் வண்ண மீன்கள் அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு 11 தொட்டிகள் அமைக்கப்பட்டு இதில் பல அரிய வகை மீன்கள் வளர்க்கப்பட்டுள்ளது. தற்போது பார்வைக்கு திறந்து விடப்பட்டுள்ளது. இதனை ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்து பார்வையிட்டு செல்கின்றனர்.

சுற்றுலா பயணிகளை ஈர்க்கும் வகையில் பல்வேறு பொழுதுபோக்கு வசதிகள் செய்யப்படும் என பொதுப்பணித்துறையினர் தெரிவித்தனர்.